Now when Guha points out Kausalya, Bharata says it is the mother of Rama, who has now renounced all the glory of royalty, because he, poor Bharata, is born. Guha falls at her feet and sobs : she is much moved and consoles him saying that the exile of Rama is indeed beneficial because now a new brother has been added to the four brothers. Next Bharata introduces Sumitra to Guha and lastly he has to speak about Kaikeyi. He is naturally much embarrassed to have to introduce his own mother, whose calculated cruelty has resulted in the banishment of Rama, the death of King Dasaratha and all the attendant misery. Kambar himself intervenes here through one verse, and then makes Bharata speak another verse. Guha has fallen at the feet of Kausalya and Sumitra in turn, and has wept; but what is he to do, when the wantonly cruel woman, the author of all the misery, is introduced to him? Yet she is also the mother of Bharata, who has claimed the unqualified admiration of Guha himself. Kambar adroitly rings down the curtain. The boat reaches the shore. Disembarking claims Guha's attention. He just inclines his head with folded hands towards Kaikeyi in token of salutation to the mother, jumps into the water, and attends to the other urgent work. This is a high watermark of stage management. All the boats are emptied and the troupe now marches on to the hermitage of Bharadvaja rishi.

With a dexterous touch of his pen, Kambar has exalted both Guha and Bharata to great heights of human glory. When Guha learns of Bharata's mission, i.e., that it is only to restore Rama's kingdom to him, he cannot contain himself. A staunch adherent of Rama, he cannot but exalt Bharata even above Rama for the reason so naturally mentioned by him. Bharata himself voluntering to go and meet Guha is another characteristic touch. Of course the boat scene has no equal. It is highly dramatic and the climax comes when Bharata finishes his introduction of his mother. The final is one characteristic of Kambar and is not to be found anywhere else. Valmiki does not have this scene.

Later on in Valmiki. when taking leave of the rishi Bharadvaja, Bharata introduces the queen mothers to him. The rishi says that every thing will end well and it is all for the good of the gods, the asuras and mens. This is all very stale. Kausalya does not make any reply here. We may probably think that the introduction of the queen mothers to sage Bharadvaja is not after all necessary and serves no purpose. The sage when asking the purpose of Bharata's visit, himself says that through his Yoga he had known Bharata's purpose. The sage is one, unlike the hunter, who knows the persons connected with the family of Rama. Dasaratha was the highest in the land and any rishi in a nearby forest would definitely have known him. Hence Bharata's introduction has no meaning nor does it have any purpose. Kambar has obviously felt like this and so has taken out the incident of introduction from this context and placed it earlier. Guha the hunter of course does not know royalty and so he has to be told. Besides, some time is taken for the boat to cross the Ganges. The introduction also serves to fill up this interval of time. Here again Kausalya is not merely passive; she is made to play a role, the role of the majestic queen mother. We have heard her words. Here we see the hand of Kambar has worked a little but effective embellishment in the original story. Kausalya blesses Guha and Bharata in the magnanimity of her heart and this applies some balm to the troubled minds of Guha and Bharata at this moment.

So these are the pictures of Guha. In the original, he is just a mighty hunter, befriended by Rama, and loyal. On the other hand, Kambar has painted quite a realistic picture of Guha. In all innocence Guha produces honey and fish for Rama but Kambar gets over the situation in a very artless manner without offending anybody's feelings. All the ferocity and antagonism of Guha at the sight of Bharata's forces disappear immediately and he begins to sob when he learns the real nature of Bharata's mission. He comes alive as a real person, a live person, a man of flesh and blōod, loyal and serviceable, ferocious and impulsive, but soft and affectionate the next minute. The rugged and mightly hunter of the Ramayana has not only our esteem and admiration, but our love and affection also in Kambar.

10

Ramalinga Adikal and Gandhi Adikal

(A Bird's Eye—view)

N. SANJEEVI

Translation from Tamil original

by

V. JAYADEVAN

"The merciful thought to the Tamils
is given along with the mother's milk;
The ambrosia like Gandhi Marga
is the wealth of the Tamil Land,
That promotes the sacrifice of
bubble-like life for a noble cause;
Our service is to hold that doctrine
and spread it everywhere in the country."

—Namakkal Kavingar.

★★

"A virtue good is non-killing, unique and sons compare.
But next to that is non-lying, a virtue good and rare."

—Kural (Translation by K. M. B.)

★ ★

"The great light of Grace; The great light of Grace;
The unique great Mercy—the great light of Grace."

—Vallalar.

★ ★

"It is to be deeply thought (and heaved)
that no hint of thought of Gandhi is
available on Vallalar."

—Dr. N.S.

"I am one who tries to follow Gandhi not only in the political field, but also in the spiritual field. Out of my experience in this attempt and as a result of my study of Gandhi comparatively with Vallalar, I believe firmly that Karam chand Gandhi is Vallalar of the north. We should think Gandhi, who was born in the north and who became the leader of the whole nation as the representative of Vallalar who disappeared (attaining siddhi) saying, "I'll come back again." This belief, I may hold because of my devotion for the two great men. But as far as I am concerned, this belief has yielded good fruits and hence I pray that all should believe in the same.

The teachings of Vallalar should be compared with those of Gandhi and his life, and elucidated. Then only the truth of my view can become crystal clear."

—Cilambu-c-celvar Ma. Po. Sivagnanam,
Vallalar Kanda Orumai-p–padu, 1965, pp. 461-2.

★ ★

1.0. Saints Ramalingar and Gandhi were both born in the 19th C. The former was born in the first quarter and the latter at the end of the third quarter of the century. But the life of Ramalingar (1823-1874) ended in the same century itself, while Gandhi's life of 80 years (1869-1948) started in the later half of the 19th C. and ended in the first half of the 20th C.

1.1. Our leader, Cilambu-c-celvar, Padmasri Ma. Po. Sivagnanam, in his master-piece 'Vallalar Kanda Orumai-p-padu,' the winner of the award of Sahitya Academy, throws light, for the first time, elegantly on the comparative study of Valallar and Gandhi- their origin and demise. An instance in the above said work is as follows: [1]

> "Gandhi was five when Vallalar (attained siddhi) was no more. Vallalar was born on the 5th October, 1823 and Gandhi on 2nd October, 1869 in Porbandar. We see a unique surprising similarity in the demise of these two great people. Vallalar attained siddhi on a Friday the 30th in the month of January, 1874 and Gandhi also died on a Friday the 30th in the month of January, 1948."

Thus Cilambu-c-celvar brings forth the comparative notes on the date of birth/demise of Vallalar and Gandhi and hints at the rare and great note on the end of the complete life of the two great people. It will be more apt if it is dealt with at the end of this paper.

1·2 The life period of Vallalar was half a century-52 years to be exact. Gandhi's life period was more than three fourths of a century-80 years to be exact This difference was caused not only by destiny but also by wordly affairs. This can be understood from and by their public life. Vallalar's life was more of internal struggle and Gandhi's was more of external struggle. Vallalar himself completed his life. But Gandhi's life was cut off by one Godse.

1.2.1 This distinction is to be noted well. Gandhi was a statesman and Vallalar was a spiritual genius. Their end itself shows this difference well. Regarding this, Cilambu-c-celvar, the impartial researcher portrays his view thus : [2]

'A brahmin Godse killed Gandhi.' A rumour floats that Vallalar's end was also similar to that of Gandhi.

One or two forward communities in the Tamil society might have failed to look at the novelty in the ancient culture by accepting the leadership of Vallalar in the field of religion; It is true that they failed. A few elderly people among them, being orthodox, might have opposed the revolutionary thoughts of Vallalar; History has recorded that they opposed them.

But we can profoundly and firmly believe that no one among them might have become Godse to take the life of Vallalar.

Those who have a staunch belief in the culture of the Tamils will surely accept my view and won't raise any contradiction. No Godses were born in the history of Tamil Land to put an end to the lives of the learned men (saints), even in Vallalar's period, nor will be born in the future either. This is the unique greatness of the Tamils.

With an intention to kill Vallalar, even that brahmin who is supposed to have killed Vallalar would not have touched his body, since he had got a supreme Piranva body ('piranava dekam').

> "I prayed to offer me a physique that cannot be
> destroyed ever by air, earth, sky, fire, water,
> sun, moon, Yama, disease, dangerous weapon,
> planets, wild deeds of others, and other
> things; He offered and graced me in no time."

In this stanza, Vallalar says that by God's grace he had got a physique that cannot be destroyed even by dangerous weapons. This stanza is internal evidence to prove that Godseism is not possible in the case of Vallalar. Let those who have belief in the words of Vallalar believe that Godseism has not occurred in the case of Vallalar."

2. 0 Let us now see the chief similarities and dissimilarities between Vallalar, the spiritul saint of the south and Gandhi, the statesman of the north.

2. 1 Vallalar did not go to school. But Gandhi studied in schools and even went abroad to pursue his studies.

2. 2 Vallalar never liked to study and take a profession from the beginning itself. But, Gandhi, on the contrary, studied and took a profession initially.

2. 3 Both of them married when they were young. But Vallalar, being born a spiritual saint, had no acquaintance with love-life. Gandhi led a love-life (marital life), but he condemned such a life, punished himself and was elevated high. Vallalar, by not living with his wife but led a solitary-spiritual life, as a white clad saint. Gandhi lived with his wife and led a restricted

life. He did not become a white robed saint. In this respect the marital lives of Ramalingar, Ramakrishnar and Gandhi deserve a comparative study. Their life was according to their nature and attitude. But the great glorious life celebrated by the women community is that of Ramakrishnar and Gandhi.

2. 4 Let us examine a little about the white dress of Ramalingar and Gandhi. The notes regarding this put forth by Cilambu-c-celvar are to be thought over:[3]

Vallalar wanted to make reforms in the religious field and hence he did not like to wear the kavi cloth. Only the merciless hard siddhas in order to gain mercy should wear kavi and therefore Vallalar who was full of mercy thought that the white robe would do for himself.

Ramakrishnar and Gandhi wore two clothes and lived as white robed saints like Vallalar.

2. 5 Vallalar and Gandhi adopted the same simplicity that they had in their dress, and in all other things like food, ornaments etc.

Vallalar mocks at the people's shameful craze for ornaments :[4]

> "If He is for us to have holes in the ears and noses of men and women in order to adorn with ornaments, would he not have sent them with holes in the ears and noses? If one tries to seek an answer to this, will he or she like to wear the ornaments?"

Any who reads these words of Vallalar will be reminded of the discipline and decorum of Gandhi who collected jewels from women for the welfare fund of Harijans, and his supreme nature of having a wife who had no ornaments

2. 6. Both Vallalar and Gandhi liked only vegetarian food and showed a bitter hatred towards meat. Their writings on this should be studied and their similar attitude noted.

2. 7 Both Ramalingar and Gandhi never gave importance to the celebrated tributes bestowed on them as 'Arut-pirakasa-Vallalar' and 'Mahatma' respectively. But, both of them liked all famous saints, even though they decried themselves.

By 1867, only the first four tirumurais of Vallalar were published. Before the name of the author Ramalingar, the title 'Tiru-arut-pirakasa-Vallalar' was put on that book. On seeing this, Vallalar angrily asked Velayuda Mudaliyar of Toluvur, the editor/publisher of the work, "Who asked you to put as Tiru-arut-pirakasa-Vallalar?" Later he convinced himself by correcting it as Chidambaram Ramalingam Pillai who asks as who is the charitable man of the light of holy graces, thereby punning the word Vallalar.

2.8 Ramalingar mostly revealed his thoughts through poems, speeches, essays and letters But Gandhi is not a poet. Therefore he revealed his thoughts only through speeches, essays and letters. We can feel proud of the fact that Gandhi brought the same simplicity and tenderness which Vallalar had given to his mother tongue, to English that was not his mother tongue.

2.9 As Ramalingar celebrated the divine Kural, Gandhi celebrated Bhagavat Gita. It may be compared with the stanza of Nalkur Velviyar in Tiruvalluva-malai. He sings :

> "On seeing the north it is said that He who married Nappinnai is the axis to North Maturai; On seeing the south it is said that Valluvar who showered honey of sinless scholarship is the axis to South Maturai".

2.10 Both Vallalar and Gandhi had much attachment to their mother tongue. Both of them possessed knowledge of Sanskrit. But Vallalar was more well versed than Gandhi in his mother tongue as well as in Sanskrit, and remained unsurpassed. Vallalar, being an eminent master of Tamil,.also knew Sanskrit, while Gandhi who knew Sanskrit did not know Tamil.

2.11 Both Gandhi and Vallalar had contempt for the hatred of the casteism and religion and remained as impartial saints. This is due to the command of Time. It is the calm after a storm and battle. Because of this same cause, this attitude is found in Ramakrishar's concept also. Vallalar's impartiality bore fruit in Tamilnadu; Gandhi's impartiality bore fruit all over India.

2.12 Vallalar is a perceptive prince of words. He is a poet-philosopher. But Gandhi is an enthusiastic man of deeds. Wide political and organising capacity are lacking in the former while the latter possessed such virtues.

2.13 It seems that Ramalingar had performed many miracles (sittu); But, Gandhi did not do anything of that sort. In fact it appears that he had no liking for that.

2.14 Ramalingar wanted a deathless great life and insisted on the same. Because of this, he came across many worldly miseries. But, Gandhi did not want a deathless life ; On the contrary, it seems he liked death.

2.15 Ramalingar limited the area of Vadalur mostly for his service. But Gandhi spread his service throughout the whole of India.

Cilambu-c-celvar gives a vivid picture comparing Vadalur and Wardha under the poetic and rhyming heading, 'Wardhavum vadalurum' : [7]

"We saw in recent times that the small village Wardha had become a holy divine pilgrimage centre to be visited by political leaders, learned people, and virtual saints, after Gandhi had established an ashram there. Mettukkuppam Siddhivalakam had also attained such a reputation, a century back. After Vallalar had migrated to that place, monks, great pandits, scholars and the government officers in the high rank besieged Siddhivalakam to worship the saint Vallalar.

Many of them, in order to worship the saint often and thereby to worship God with him and hear his teachings daily, constructed houses and migrated to the villages like Vadalur and Mettukkuppam.

Vallalar lit a holy light in Siddhivalakam. He worshipped this holy light as the light of Grace by himself and at times with his devotees.

Velayudam Pillai of Toluvur who got an opportunity to witness such a great scene says that people of different castes crowded around the saint.

Vallalar did not like the crowd around him which was mad about him. He avoided many, and asked them not to settle in Vadalur. In spite of such check, many migrated there in in numbers with their families.

2.16 Ramalingar became the great hero of the 19th C. in Tamilnadu by his profound thoughts. Gandhi became the father of the nation in the 20th C. by his devoted deeds. Here, the idea of Cilambu-c-celvar, the leading political/Tamilological/ ethical wrier, is note worthy.[8]

Vallalar said that a merciful gracious impartial man should guide the politics of the country. The saint of Wardha was also of the that same view all the political activities should be of impartiality.

Cilambu-c-celvar in his Vallalar kanda orumai-p-padu, estimates in one place[9] that Vallalar, on the basis of national integration of India, built the mansion of human integration over which he hoisted the flag of soul integration (anmaneya orumaippadu) that insists on the integration of all living beings. This concept is similar to that of Gandhi also.

2. 17 Vallalar and Gandhi who considered Ahimsa and Truth as the two eyes and did tapas and service, differed in their means and practical approach. But the ultimate end was one and the same. Cilambu-c-celvar pens:[10]

"Ramalingar, even though interested in having a good rule in the country, mostly concentrated in the spiritual field. Gandhi, even though interested in the spiritual field, took much more interest in the political field."

SIMILARITY IN DOCTRINE

The above said uncontroversial controversy was due to the circumstances and the surroundings of their living period. Vallalar sang:

"Let the merciless' rule perish
Let the graceful right rule."

Gandhi called this as 'Ramarajyam'. Besides this, both of them have similarities in thought in many respects even as to have

doubt whether Vallalar himself had lived as Gandhi. Ramalingar spread the following doctrines and served them to Tamilnadu.

The difference caused by the casteism ought to be rooted out thoroughly.

All the religions should perish and an integrated human society where there is no religion should be established.

All the lives must be considered and treated equal and loved.

Starvation certainly should be eliminated and all should eat fully to quench their hunger.

All these doctrines were also held and insisted on by Gandhi. In one aspect, Gandhi differs a little from Vallalar-i.e., Vallalar wanted a religionless human society. But Gandhi wanted to establish an integration among religions without destroying them. This difference need not be considered as a great contradiction.

It can be taken that it is not contradictory to Vallalar if it is possible to develop a mutual integration among religions. If it is not possible to do so, it is better to destroy all the religions. This would not be contradicting to Gandhism.

Vallalar spread his revolutionary doctrines among the people. But he did not have an opportunity to put them into action. It is mainly due to his concentration being focused on attaining a deathless great life for his soul.

GANDHI'S VICTORY

As Gandhi engaged himself in politics, he could bring about many revolutionary changes in action. Hence, now in India, a secular government has been established; Untouchability has been rooted out legally; Women are equal to men in wealth right and in all other social rights; It has been promised to establish a socialistic society and to destroy the evil of a sect, being in joy and the pr litarian sect, being in starvation.

In Tamilnadu, the superstition of offering lives to God has been declared illegal; Legal action has been taken to get rid of the consumption of liquor.

Non-alignment policy is being followed to avoid a world war, to have friendly acquaintance with all nations equally, and to seek a renaissance in the lives of the native people.

Efforts are being taken to establish national integration in India without any harm to universal integration.

All these are due to the teachings of Gandhi and these are similar to Vallalar's concept of the soul integration.

LIGHT (JOTHI) IS GANDHI

To put it in a nutshell, Ramalingar who shone in the shape of light (Jothi) in Tamilnadu appeared as Gandhi in the north.

The Tamils who did not accept the doctrines of Vallalar when he taught them, accepted the same, welcomed and bowed while Karamchand Gandhi of the north uttered them. Knowing this fact, Vallalar himself addressed the Tamils thus :

> "The great truth which I now vainly put forth to you will be uttered by mahatmas of the north and at that time you will understand it and regard it."

2 . 18 Time is greater than the universe. The universe in the place where Time puts its foot and walks. Therefore it is not surprising that the atomic rays of Time would pierce the universe and the wise sage in it. For this, the historical and religious view of Vallalar and Gandhi is an instance. This truth has been well studied by Cilambu-c-celvar comparatively. He states :[11]

> "What Gandhi had said about the epic Mahabharata is apt to Puranas like Periyapuranam. Ramalingar did not say that Periyapuranam is completely fictitious with no historical facts. And also he did not say that it is completely a historical purana. Sixty three philosophical concepts have been explained through sixty three saiva saints (nayanmars)."

2 . 19. It is already pointed out that Cilambu-c-celvar is the first and foremost pioneer in bringing out a comparative study on the saints of Vadalur and Wardha. Another instance to establish this is as follows:[12]

"Before he went to Vadalur, Vallalar's mind and physique became unique. Internally as well as externally, he had created great changes. He found out the concept of the right of soul integration (anmaneya orumaippatturimai) as Gandhi."

2.20 Both Gandhi and Vallalar are foes to religion/rationalism, but friends to reformations/impartiality. Both of them wanted to conduct reforms, not destroying the existing things[13] and they also attained success in it to a certain extent. To make their dreams true in practice, socialism is essential in Sanmarga also. If imperialism and capitalism are eliminated, then socialism is possible. Then only Sanmarga is possible. If socialism is not established then Sanmarga is not possible. Socialism is the mother of Sanmarga. So Karl Marx is a must, to make the dreams of Vallalar and Gandhi true in practice.

"How can I carry on a research on God and divinity among the people who starve without bread? Bread and water are the incarnations of God to them," said Gandhi, bursting into tears. Spiritual and Godly teachings become insignificant in the presence of the cruelty of hunger,"[14] said Vallalar. The words of these saints are to be noted.

2·21 Same is the view of Tiru-vi-ka who also celebrated both Vallalar and Gandhi.[15]

2·22 It is certain that the heart of one will never forget "Arutpa" of Vallalar who did a unique tapas, even if the brain forgets the politics of Gandhi who did public service.

(Note : I owe a great deal to Thiru. N. Mahalingam, Vallalar / Annalar Vallal and the president of Ramalinga Mission. Paper submited in the seminar on the comparative study of 'Ramalingar and Gandhi' at Rajeswari Kalyana Mandapam, Madras-4, on 2-10-1974).

NOTES

1.	Vallalar Kanda Orumai-p-padu (1965) Ma.po. Sivagnanam	pp. 453–4
2.	,,	pp. 450–1
3.	,,	pp. 114, 121
4.	,,	p. 120
5.	,,	p. 200
6.	,,	pp. 322–340
7.	,,	pp. 245–6
8.	,,	p. 366
9.	,,	p. 8
10.	,,	pp. 454–7
11.	,,	pp. 71 –2
12.	,,	p. 98
13.	,,	pp. 230–33
14.	,,	pp. 133–4
15.	Vide Tiru-vi-Ka's Paramborul Allatu Valum Vali.	

(Note:

Question : Will it be apt to say that Light (Jothi) is Gandhi, as said by Cilambu-c-celvar, as Gandhi was born before Vallalar got siddhi ?

Answer : Vallalar might have mingled and merged with Gandhi, as he mingled with all the eternal things. — Dr. N.S.)

11

தமிழிலும் மலையாளத்திலும் பா அமைப்பு ஓர் ஒப்பாய்வு

ச.வே. சுப்பிரமணியன்

தமிழும் மலையாளமும், மொழிநிலையை நோக்கப் பிற திராவிட மொழிகளினும் நெருக்கமும் பொதுமையும் பெற்றுத் திகழ்கின்றன. செய்யுளமைப்பிலும் இப்பொதுமை எதிர்பார்க்கப்படுகின்றது.

சிறுசிறு அசைக் குழுக்களின் ஒழுங்கான தொடர்ச்சியால் ஆக்கப்பட்ட கவிதைப்புறவடிவமே இங்குச் செய்யுளமைப்பு எனக் குறிக்கப்படுகின்றது[1] அசைக் குழுக்கள் நெடிலும் குறிலும் ஆகவோ, அழுத்தமுடையனவும் அழுத்தமில்லாதனவு மாகவோ, அமையலாம். வடமொழிச் செய்யுளமைப்பு நெடில் குறில் அசைக் குழுக்களை அடிப்படையாகக் கொண்டது. ஆங்கிலச் செய்யுளமைப்பு அழுத்தமுடைய, அழுத்தமில்லா அசைக் குழுக்களை அடிப்படையாக உடையது. திராவிடச் செய்யுளமைப்பு இதினின்று சிறிது மாறுபடுகின்றது.

தமிழில் செய்யுள், யாப்பு எனும் தலைப்புகளின் கீழ் பா வடிவக் கல்வி அமைகின்றது. தொல்காப்பியம், இலக்கணத்தை எழுத்து 'சொல்' பொருள் என மூன்றாகவும், வீரசோழியம் போன்ற பிற்கால நூற்கள் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என ஐந்தாகவும் பகுத்துத் தருகின்றன. தொல்காப்பியப் பொருளதிகாரப் பகுப்பான செய்யுளியலிலும், பிற ஐந்திலக்கண நூற்பகுதியான யாப்பதிகாரத்திலும், தனி யாப்பு நூற்களிலும் செய்யுளமைப்புப் பற்றிய செய்திகள் தொகுக்கப்படுகின்றன. இவையொழிய, இலக்கிய வகைகளும் அவற்றின் அமைப்பும் பற்றிக்கூறும் ஏறக்குறைய எட்டு

பாட்டியல் நூற்களும் கிடைக்கின்றன. இந்நூற்கள் கி.மு. முதல் கி. பி. 20-ஆம் நூற்றாண்டுவரையுள்ள காலத்தினவாம். தொல்காப்பியம், யாப்பு என்பதைச் செய்யுளுறுப்பாகக் கொண்டதனால் செய்யுள் வடிவம் பற்றிய பகுதி செய்யுளியல் எனப் பெயர் தாங்கி நிற்கின்றது ; பிற்கால இலக்கணங்கள் யாப்பு என்ற பெயருடன் நிற்றல் இந்நிலை மாறியதனைப் போலும்.

மலையாளச் செய்யுளமைப்பை அறியச் சில இலக்கண நூற்கள் துணைபுரிகின்றன. 14-ஆம் நூற்றாண்டில் தோன்றிய 'லீலாதிலகம்' பாட்டு,எதுகை, மோனை என்பனவற்றைக் குறிப்பிடுகின்றது. (1 : 11 ; 4 : 80-82 ; 6 : 100 - 103)[2] கருணாகரதாசரின் 'விருத்த ரத்னாகர' என்ற வடமொழி நூலின் உரை இம்மலையாளச் செய்யுளைச் சுட்டுகின்றது. மலையாளச் செய்யுள் பற்றிய விரிவான விளக்கம் தரும் முதல்நூல் கோவுண்ணி நெடுங்காடியின் 'கேரளகௌமுதி' (கி. பி. 1875). இந்நூலின் செய்யுள் பற்றிய இயல், "வ்ருத்த லோக", 37 நூற்பாக்கள் உடையது: இவற்றில் 21 மலையாளத்துக்கே உரிய செய்யுள் பற்றியும், பிற 16 வடமொழிச் சார்புடைய செய்யுள் பற்றியும் கூறுகின்றன. இவ் வடமொழிச் சார்புச் செய்யுட்பகுதி விருத்த ரத்னாகரத்தை அடிப்படையாகக் கொள்கின்றது. இதற்கு அடுத்து வந்தது ஏ. ஆர். ராஜராஜவர்மாவின் விருத்த மஞ்சரி (1904). இதன் ஒன்பது பகுதிகளில் முதல் ஏழும் வடமொழிச் சார்பான மாத்ரா, வர்ண விருத்தங்களை ஆய, எட்டாம் பகுதி மலையாளமொழி (பாஷா) விருத்தங்களை ஆய்கின்றது; ஒன்பதாம் பகுதி முடிவுரையாக அமைகின்றது. கொடுங்கல்லூர் கொச்சுண்ணித் தம்புரானின் 'காந்தவ்ருத்தம்' வடமொழி விருத்தங்களைப் பற்றிப் பேசுகின்ற மலையாள நூல். (அச்சு : கொல்லம் ஆண்டு 1104). தகழி இ. ஆர். பிள்ளையின் 'விருத்தசகாயி', பாஷாபோஷினி சித்ர மாஸிகா என்ற பத்திரிகையில் தொடர்ச்சியாக வெளியிடப்பட்டது (தொகுதி 45 பகுதி 1,2). கடத்தநாடு உதயவர்ம ராஜாவின் 'சத்வ்ருத்த மால' செய்யுளியல்பு கூறும் மற்றொரு நூல். இராமவர்ம அப்பன்தம்புரானின் 'திராவிடவ்ருத்தங்களும் அவயுடே தசா பரிணாமங்களும்' என்ற நூல் திராவிட விருத்தங்கள் வளர்ந்த படிநிலைகளைக் காட்ட முயல்கின்றது. மலையாள விருத்தங்கள் பற்றிய முழுநிலைக்கல்வி, என். வி. கிருஷ்ண வாரியரின், 'A study of Malayalam Metres' எனும் பொருட்கட்டுரையில் (thesis)அமைகின்றது (1947). தாளவடிப்படையில் விருத்தங்களை ஆய்கின்றது

குட்டிக்கிருஷ்ண மாராரின் 'விருத்த சில்பம்' கே. கே. வாத்யாரின் 'விருத்த விசாரமும்' பேராசிரியர். பி. குஞ்ஞிக்கிருஷ்ண மேனோனின், 'பாஷாவிருத்த தீபிகையும், விருத்த மஞ்சரிக்குத் திறனாய்வாகவும் புது விருத்தங்கட்கு இலக்கணமும், பெயரும் கூறும் முகமாகவும் அமைகின்றன.

தொல்காப்பியம் 34 (26+8) செய்யுள் உறுப்புக்களைத் தருகின்றது. இவற்றில் முதல் 26-ம் எல்லாச் செய்யுட்கும் பொது எனவும் பிற எட்டும் முழுச்செய்யுளின் அமைப்பு நிலையைக் குறித்தன எனவும் கொள்வர்.

அவை, (1) மாத்திரை (2) எழுத்து (3) அசை (4) சீர் (5) அடி (6) யாப்பு (7) மரபு (8) தூக்கு (9) தொடை (10) நோக்கு (11) பா (12) அளவு (13) திணை (14) கைகோள் (15) கூற்று (16) கேட்போர் (17) களன் (18) காலம் (19) பயன் (20) மெய்ப்பாடு (21) எச்சம் (22) முன்னம் (23) பொருள் (24) துறை (25) மாட்டு (26) வண்ணம் (27) அம்மை (28) அழகு (29) தொன்மை (30) தோல் (31) விருந்து (32) இயைபு (33) புலன் (34) இழைபு என்பன.

இம் முப்பத்துநான்குள் மிகச் சிலவே பிற்கால ஆசிரியர் பெரும்பாலோராலும் கொள்ளப்படுகின்றது. தொல்காப்பியம், செய்யுளின் புறவடிவோடு, பொருண்மை, வெளியீடு, பயன், இலக்கியப் பகுப்பு ஆகிய பலவற்றையும் பற்றி நினைக்கப் பிற இலக்கணங்கள் புறவடிவுக்கே முதன்மை அளித்து ஒழிபியல் கருத்தாக மட்டும் பிறவற்றில் ஓரிரண்டைச் சுட்டிச் செல்கின்றன. காப்பியம் கூறும் எழுத்து, அசை, சீர், அடி, தொடை என்பன இவற்றிலும் கருதப்படுகின்றன. தொல் கூறிய தளைபற்றிய கருத்துக்களின் வளர்ச்சி நிலையில் 'தளை' என்ற 'புதிய' உறுப்பை இணைக்கின்றன. இவ்வாறும் பாடலின் புறவடிவைப் பற்றியன என்பது தெளிவு. இக்காரணம் பற்றித்தான் செய்யுள் என்பதற்குப் பதில் யாப்பு எனக் கையாண்டனரோ என்று தோன்றுகிறது. பொருள்கோள் (மாட்டு), வண்ணம், எண் வனப்பு என்பன, அருகியே யாயினும் பிற்காலத்தும் கொள்ளப்படல் மரபுநிலை முழுமையும் இழக்கப்படாமைக்குச் சான்றுபகர்கின்றன.

மலையாள யாப்புநூற்கள் செய்யுள் அமைப்பைத் தெளிவாகத் தந்தன என்று கூறுவதற்கில்லை. தமிழ் நூற்களில் அமைவது போலச் செய்யுள் உறுப்புக்கள் அங்குத் தொகுக்கப்பட்டில. ஆயின் மேற்கூறிய நூற்களை நோக்கும்போது சில உறுப்புக்கள் தெளிகின்றன.

அவை, (1)மாத்ர-மாத்திரை (2)வர்ணம் அல்லது அக்ஷரம்-எழுத்து (3) லகு, குரு - அசை (4) கணம் - சீர் (5) பாதம் - அடி (6) பிராசம் - தொடை (7) யதி - விட்டிசை (8) தாளம் என்பன. இவற்றில் இறுதியிரண்டொழியப் பிறவனைத்தும் தமிழிலும் செய்யுளுறுப்பாக அமைந்தமை நினைத்தற்குரித்து. அவ்விரண்டும் உறுப்புநிலையில் கொள்ளப்படாவிடிலும் தமிழ்ச் செய்யுளிலும் உள்ளமை நாம் அறிந்ததே. மலையாள யாப்பிலக் கணங்களும் செய்யுளின் புறவடிவுக்கே முதன்மை கொடுத்தமை இவ்வுறுப்புநிலையால் தெளிகின்றது.

இப்பொது வுறுப்புக்கள், இயல்பிலும் இயலுந் திறத்திலும் பெரும்பான்மை ஒப்புமையும் சிறுபான்மை வேற்றுமையும் பெற்றுத் திகழ்கின்றன.

1. மாத்திரை - மாத்ர

தமிழ் யாப்பிலக்கணங்களில் தொல்காப்பியச் செய்யுளியல் மட்டுமே இவ்வுறுப்பைக் குறித்தது. அங்கும் அது விளக்கப்படவில்லை. எழுத்ததிகாரத்தில் அமைந்த விளக்கம் போதுமானதாக இருப்பதனால் போலும்.

பாஷா விருத்தத்திலும் வடமொழிச் சார்பு விருத்தமான மாத்ர விருத்தத்திலும் இம்மாத்திரை ஓர் இன்றியமையாத உறுப்பாம். குற்றெழுத்துக்கள் ஒரு மாத்திரையும், நெட்டெழுத்துக்கள் இரு மாத்திரையும் புலுதம் போன்ற எழுத்துக்கள் பெரும்பான்மை மூன்று மாத்திரையும் பெறுகின்றன. மாத்திரையின் அளவு வேறுபாட்டாலும் எண்ணிக்கை வேறுபாட்டாலும் பல விருத்தவகைகள் அமைந்தமையை இலக்கணங்கள் காட்டுகின்றன.

2. எழுத்து - வர்ணம்

தொல்காப்பியம், எழுத்துக்கெனத் தனியிலக்கணம் செய்யுளியலில் வகுக்கவில்லை. இதற்குக் காரணம் அது முன் எழுத்

ததிகாரத்தில் விளக்கப்பட்டமையே. கலம், காரிகை ஆகிய பிற்கால இலக்கணங்கள் முறையே பதினைந்தும் பதின்மூன்றும் எழுத்து வகைகளைச் செய்யுட்குரியனவாகச் சுட்டுகின்றன. இவை யாப்பிலக்கணம் மட்டும் கூறுவதனால் இந்நிலை அமைந்தது போலும். அல்லது, யாப்புக்கு எனத் தனியெழுத்துக்கள் சிறப்புநிலையில் கருதப்பட்ட ஒரு காலநிலையின் பிரதிபலிப்பு ஆகலாம்.

தமிழிலும் மலையாளத்திலும், செய்யுளில், எழுத்து எண்ணும் பொது இயல்பு அமைகின்றது. அந்நிலையிலும், இருமொழிகளிலும் உயிரெழுத்துக்களே எண்ணப்படுகின்றன.

> உயிரில் லெழுத்து மெண்ணப் படாஅ
> உயிர்த்திற மியக்கம் இன்மை யான.—தொல். செய். 43

> ஸ்வரங்ஙள் தான் அக்ஷரங்ஙள்
> வ்யஞ்ஞனம் வகயில்லிக... —விருத்த மஞ்சரி. 7

> (ஸ்வரங்ஙள்—உயிர்—வ்யஞ்ஞனம்—மெய்)

மெய்யெழுத்துக்கள் எண்ணப்படாவிடினும், அசைப்பகுப்பின் போதும் வண்ணம் போன்ற பிற உறுப்புக்களிலும் அவை சில தகுதிகள் பெறுவது உண்டு. அடியில் உள்ள எழுத் தெண்ணிக்கையின் அடிப்படையில் தோன்றிய தமிழ்ச் செய்யுட்கள் கட்டளைக் கலிப்பா, கட்டளைக் கலித்துறை என்பன. மலையாளத்தில் காணப்படுகின்ற வர்ணவிருத்தங்கள் அனைத்துமே இவ் வடிப்படையின.

ஒரு அடியில் அல்லது சீரில் இத்தனை எழுத்துக்கள் அமையலாம் என்ற வரையறை தொல்காப்பியத்தில் மட்டுமே உண்டு. நாற்சீரடி, எழுத் தெண்ணிக்கை வேறுபாட்டால் ஐம் பகுப்புப் பெறுகின்றது. நாற்சீரடியின்கண் நான்கு முதல் 20 எழுத்துவரை வருகின்றன. எனவே ஒரு சீரின்கண் ஒன்றுமுதல் ஐந்து எழுத்துவரை வரலாம் என ஆகின்றது. வஞ்சிச்சீர் சிறப்புநிலையில் சிறுமை மூன்றெழுத்தும் பெருமை ஆறெழுத்தும் பெறுகின்றது. இவ்வகை எழுத்தடிப்படைப் பகுப்பு பிற யாப்பிலக்கணங்களில் அமையவில்லை. ஆயின் இவ் எழுத்தெண்ணிக்கையின் செல்வாக்கு கட்டளைச் செய்யுட்களில் தென்படுகின்றது.

வர்ண விருத்தம் இரு பகுப்புடையது. ஒன்று சந்தஸ்; அது, ஒரு அடியின்கண் ஒன்றுமுதல் 26 எழுத்துவரைப் பெறும்

தன்மையினது. மற்றொன்று தண்டகம்; 27 முதல் பல எழுத்துப் பெறுகின்றது. தமிழ் யாப்பிலக்கண நூலான யாப்பருங் கலத்தின் விருத்தியுரையிலும் வீரசோழியத்தின் யாப்பதிகாரத்திலும் இச் செய்தி நினைக்கப்படுகின்றது. வீரபத்ர முதலியாரின் விருத்தப் பாவியல் சந்த விருத்தங்களை விரிவாக ஆய்கின்றது. திருமழிசைப் பிரானின் திருச்சந்த விருத்தம், பெயர்நிலையிலும் பொருந்தி யமை கின்றது. அப்பரும், திருமங்கை மன்னனும் பாடிய திருக்குறுந் தாண்டகம் நெடுந்தாண்டகங்கள் ஏதேனும் நிலையில் இத் தாண்டகச்செய்யுளோடு ஒப்புமையுடையனவோஎன்ற எண்ணம் எழுகின்றது. குறிப்பிட்ட எழுத்து வரையறை அனைத்து அடி யிலும் தென்படாமையால் இது எந்த அளவு பொருத்தமுடையது என்பது தெரியவில்லை.

3. அசை — லகு, குரு.

எழுத்து தனித்தோ எழுத்துக்கள் இணைந்தோ அசையா கின்றன. தொல்காப்பியம், நேர், நிரை, நேர்பு, நிரைபு என நான்கு அசைகளைக் கருதுகின்றது; முன்னைய இரண்டிற்கும் இயலசை எனவும், பின்னைய இரண்டிற்கும் உரியசை எனவும், பெயர் சூட்டுகின்றது. பிற்கால இலக்கணங்கள் முதலிரு அசைக்கே முதன்மையளிக்கின்றன. ஒழிபியல் கருத்தான காசு, பிறப்பு உரியசையின் தாக்குதலைக் காட்டி, அது முற்றும் இழக்கப் படாமைக்குச் சான்று பகர்கின்றன.

ஒரு குறில் அல்லது நெடிலெழுத்து தொடர்ந்து ஒற்றுப் பெற்றோ, பெறாமலோ வருவது நேரசை— அ, ஈ, கல், கால் குறிலி ணையோ, குறில் நெடிலிணையோ ஒற்றுப் பெற்றோ பெறாமலோ வருவது நிரையசை — அது, அவா, மணம், வரால். நேரசை நிரையசைகளைத் தொடர்ந்து உகரம் (முற்றியல் அல்லது குற்றி யல்) வரும்போது முறையே நேர்பும், நிரைபும் ஆகிய அசைகள் தோன்றுகின்றன; காசு, காவு, அமுது, கனவு.

மலையாள யாப்பிலக்கணத்தில் அசையைக் குறிக்கும் ஒரு பொதுச் சொல் இருப்பதாகத் தெரியவில்லை. வட மொழியைப் பின்பற்றிப் போலும் லகு—குரு எனும் அசைப்பகுப்பு அங்கு அமைகின்றது. இப்பகுப்பு எழுத்தை அடிப்படையாகக் கொண் டது. உயிரோ உயிர்மெய்யோவாகிய குறிலெழுத்து லகுவாக வும், நெடிலெழுத்து குருவாகவும் உருப் பெறுகின்றன. சில சூழ்

நிலைகளில் குற்றெழுத்து குருநிலையடைகின்றது. குற்றெழுத்து விசர்கம் (·), அனுஸ்வரம் (:), கூட்டெழுத்து அல்லது சில் (ர், ல், ண், ண், ன்)லின் முன் வரும்போது குருவாக மாற்றமடைகின்றது. செய்யுளடியின் ஈற்றிலுள்ள லகு பெரும்பாலும் குருவாகக் கருதப் படுகின்றது. செய்யுளுள்ளும் ஓசை நிறைக்க வேண்டியவிடத்து லகு குருவாக நீளுகின்றது. இவை அம்மொழிக்குரிய தனித் தன்மை.

லகு, குரு என்பன ஓர் உயிரெழுத்தை மையமாகக் கொண்டன. தமிழசைகளில் இந்நிலை முழுமையாக அமைந்து காணப்படவில்லை. அசை (Syllable) யின் பொதுக்கொள்கைப் படி, 'நேர்' மட்டுமே ஓரசை; நிரையும், நேர்பும் ஈரசை; நிரைபோ மூவசை, இவையனைத்தையும் (ஓர்) அசையெனக் கொள்வது தமிழுக்கே உரிய தனித்தன்மை.

லகு குருவாக நீட்டிப்பதுபோன்றே, குரு லகுவாகக் குறுகு வதும் அருகி அமைகின்றது. இதற்குத் தனிவிதிகள் அமைக்கப் பட்டதாகத் தெரியவில்லை. நம் செய்யுளிலுள்ள ஐகார ஔகாரக் குறுக்கங்களும், அவை குறிலாக அசைப்பகுப்பில் கொள்ளப்பட லும் இங்கு ஒருங்குவைத்து எண்ணத் தக்கன. வடமொழி மர பைப் பின்பற்றிப் போலும் லகு–குரு பகுப்பு வீரசோழியத்தில் கொள்ளப்படுகின்றது.

4 சீர் — கணம்

அசை பற்றிய கருத்தில் ஒற்றுமை மிகுதியாக அமையாதது போன்றே சீர்நிலையிலும் பொதுமை குறைந்தே அமைகின்றது. தமிழ்ச் சீர் அசைகளாக்கப்படுகின்றது; பாஷா கணங்களோ இரு வேறு அடிப்படையின.

ஒன்றுமுதல் நான்கு அசைகளாலாக்கப் படுவது சீர். நாலசைச் சீர் தொல்காப்பியத்தில் கருதப்படவில்லை. அசையின் எண்ணிக்கைப்படி சீர் பெயர் பெறுகின்றது. ஓரசைச் சீர், ஈரசைச் சீர்...அசைகளின் பல்வேறு வகைத் தொடர்ச்சியால் பல சீர்வகைகள் ஆக்கப்படுகின்றன. இவை, பயிலும் பாவின் பெய ராலும் வழங்கும் வாய்பாட்டடிப்படையிலும் பெயர் பெறு கின்றமை யாம் அறிந்ததே.

அசைகளின் எண்ணிக்கையில் தொல்காப்பியமும் பிற்கால இலக்கணங்களும் மாறுபடுவதால் சீர் எண்ணிக்கையிலும் வேறுபாடு அமைகின்றது.

பாஷாவிருத்த கணங்களுள் ஒன்று மாத்திரை எண்ணிக்கையை அடிப்படையாகக் கொள்கின்றது—மாத்ர கண. மற்றொன்று எழுத்தெண்ணிக்கை யடிப்படையில் ஆக்கப் படுகின்றது —வர்ண கண. தாளகண என்ற தொடரை, திரு. வாரியர் பயன்படுத்துகின்றார். இதுவும் மாத்திரை எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டது போலும் (பக்கம் ii). அழுத்தங்களின் ஒழுங்கான தொடர்ச்சியாலுருவாகும் கணம் பற்றியும் அவர் நினைக்கின்றார். (பக்கம் 30).

நான்கு மாத்திரைகளாலாயது ஒரு மாத்ர கணம். இது ஐவகையாக நிகழ்கின்றது. (1) — — (2) — ப ப (3) ப—ப (4) ப ப— (5) ப ப ப ப (ப'–குறில் அல்லது ஒரு மாத்திரை; '—' நெடில் அல்லது 2 மாத்திரை). வடமொழிச் சார்புடைய விருத்தங்களிலுள்ள இவ்வரையறை பாஷா விருத்தத்தில் மீறப்படுகின்றது. விருத்தமஞ்சரி, இரண்டு மூன்று நான்கு அல்லது ஐந்து மாத்திரை ஒரு கணத்தில் வரலாம் எனக் கூறுகின்றது.

மூன்று எழுத்துக்கள் ஒரு வர்ண கணத்தை உருவாக்குகின்றன. இருவகை எழுத்துக்கள் உள்ளமையால் எண்வகை கணங்கள் உருவாகின்றன. அவற்றிற்கு வடமொழி மரபைப் பின்பற்றி எழுத்தால் பெயரளிக்கின்றனர்.

(1) — — — 'ம' (2) ப — — 'ய' (3) — ப — 'ர'
(4) ப ப — 'ச' (5) — — ப 'ட' (6) ப — ப 'ஜ'
(7) — ப ப 'ப' (8) ப ப ப 'ந'

திரு. அப்பன் தம்புரான் தாளவடிப்படையில் ஐவகை கணப் பகுப்புத் தருகின்றார்— த்ரிஸ்ரம், சதுஸ்ரம், கண்டம், மிஸ்ரம், சங்கீர்ணம்.

பாட்டியல் நூற்கள் கூறுகின்ற பத்துப் பொருத்தங்களுள் கணப் பொருத்தமும் ஒன்று. மூன்று அசையுடைய எட்டுச் சீர்களே அங்குப் பொருத்தத்திற்குக் கருதப்படுகின்றன. சீரும் கணமும் ஒரு பொருட் சொல்லாகவே கையாளப்படுகின்றன. சிதம்பரப் பாட்டியல் இவற்றிற்கு எழுத்தால் பெயரளிப்பதும்

மூன்று எழுத்து என்பது இங்கு மூன்று அசை என எண்ணிக்கையில் ஒத்திருப்பதும் இங்கு நினைவு கூரத் தக்கது.

5. அடி - பாதம்

பாதம் என்ற சொல் தமிழ்யாப்பிலக்கணங்களிலும் அடியைக் குறிக்கப் பயன்படுத்தப்படுகின்றது. இலக்கியத் திறனாய்வாளர் இவ்வடியையே செய்யுளின் அடிப்படையுறுப்பாகவும் முதன்மை யுறுப்பாகவும் கொள்கின்றனர்[3]. தமிழில் நாற்சீரடியே மிகுதியாகப் பயில்கின்றது. ஒன்றுமுதல் பல சீர்கள் தொடரும் போது அடி உருவாகின்றது. அவை ஒருசீரடி இருசீரடி என எண்ணிக்கை யடிப்படையில் பெயர்பெறுகின்றன. இருசீர் முச்சீரடிகள் வஞ்சிப்பாவில் மிகுதியாகப் பயில்வதால் வஞ்சிபடி எனக் குறிக்கப்படுகின்றன.

நாற்சீரடி எழுத்தடிப்படையில் பகுக்கப்படல் முன்பே சுட்டப் பட்டது. இவை உரையாசிரியரால் கட்டளையடி எனக் குறிக்கப் பெறுகின்றன. நாற்சீரின் மிக்க அடியிலும் எழுத்தெண்ணப் பட்டமையைக் கட்டளைச் செய்யுட்களில் காண்கின்றோம். பிற் காலத்தில் கட்டளைச் செய்யுட்களில் தவிரப் பிறவிடங்களில் சீர் வகையடியே கருதப்படுகின்றது.

பாதத்திற்குத் தனிவரையறை இருப்பதாகத் தெரியவில்லை. சமவிருத்தத்தில், ஒன்று முதல் ஒன்பது வரை சீர்கள் உள்ளமை தெளிகின்றது. தண்டகச் செய்யுளில் பதினொன்கும் அதற்கு மேலும் உண்டு. இலக்கியங்கள் நான்கு கணப் பயிற்சி மிகுதியையே காட்டுகின்றன.

கணங்களில் மாத்ர வர்ண அடிப்படையமைவது போன்றே இங்கும் உண்டு. இரண்டும் கலந்த–'மிஸ்ர'–நிலையும் உண்டு.

6. தொடை - பிராசம்

செய்யுளின் கண் எழுத்து ஒலிபமைப்புக்களில் ஒப்புமையும் சொல் பொருள் நிலையில் முரணும் வர ஒழுங்காக அமையும் அமைப்பே தொடை. தமிழில் முதற் தொடைகள் ஐந்து. மோனை எதுகை, முரண், இயைபு, அளபெடை. விகற்பத் தொடைகள் ஏழு –இணை, பொழிப்பு, ஒரூஉ, கூழை, மேற்கதுவாய், கீழ்க்கது வாய், முற்று. துணைத்தொடைகளாக செந்தொடை, நிரல் நிறை, இரட்டை, அந்தாதி என்பன பயில்கின்றன.

மலையாள யாப்பிலக்கணங்கள் இப் பிராசத்தை இன்றி யமையாக் கூறாகக் கருதியதாகக் கூறுவதற்கில்லை. லீலாதிலகம் தமிழை யடியொற்றிப் போலும் இதுபற்றிப் பேசுகின்றது. 'எதுக' 'மோன' என்ற இரண்டுமே அங்குக் குறிக்கப் பெறு கின்றன. அவையும் விளக்கப்படவில்லை. பிற்காலத்தார் இவ்விரு பெயர்களையும் முழுமையும் நீக்கி, அருகிப் பிராசம், த்வதீய பிரா சம் முதலிய தொடர்களை மட்டும் பயன்படுத்துகின்றனர். இராம சரிதம் போன்ற இலக்கியங்களில் எதுகை மோனையோடு அந் தாதித் தொடையும் பயில்கின்றது. இவற்றிலும் எதுகையின் பயிற்சியே மிகுதி. இம்மூன்றுமே தற்கால இலக்கியங்களிலும் மிகுதியாக முற்கால இலக்கியங்களிலேயே கையாளப்பட்டன என்பது தெரிகின்றது.

7 யதி

யதி என்பது செய்யுளடிகளின் இடையிலும், ஈற்றிலு மமையும் ஓசை நிறுத்தம். இவ்யதி சொல்லுக்கு நடுவண் வந்து சொல்லைச் சிதைத்தால் அது யதிபங்கம்-வழு—எனப்படுகின்றது கைகாலுக்கு முட்டுக்கள் அமைவதுபோல் செய்யுளடியில் இவ் யதி அமையுமாற்றை இலக்கணங்கள் சுட்டுகின்றன. யதி வரும் இடத்தில் அடி 'ஒடிகின்றது' எனவும் குறிக்கின்றன.

இத்தகைய ஓசைநிறுத்தங்கள் - விட்டிசை. தமிழ்ச்செய்யு ளிலும் உண்டு. வெண்பா, கலிவெண்பாக்களில் தனிச் சொல் லுக்கு முன் வரும் இத்தகைய ஓசை நிறுத்தம் ஒரு கோடிட்டுக் காட்டப்படுகின்றது. நீண்ட அடிகளுடைய செய்யுட்களில் மோனைவரும் இடங்களில் அடிகள் ஒடித்து எழுதப்படும் போது இத்தகு விட்டிசைகளை உணர்கின்றோம். வகையுளியின் இயல்பு இதன் செல்வாக்கைக் காட்டுகின்றது எனக் கொள்ளலாம்.

8. தாளம்

இதனை ஒரு தனியுறுப்பாகக் கொள்ளல் தேவைதானா என்பது கேள்வியே. தாளவடிப்படையில் கணம் வகுக்கப்பட்ட மையும், பாஷாவிருத்தம் இசைக்கு முதன்மையளிக்கின்றது என் னும் விருத்தமஞ்சரிக் கருத்தும் இதனைத் தனியுறுப்பாகக் கொள்ளத் தூண்டுகின்றது. மாத்திரையின் கீழ் இதனை அடக்கி னலும் தகும்.

தாளம் ஓசையை அடிப்படையாகக் கொண்டது. பாவுக்கு உரியதாகச் சில ஓசைகளை வகுக்கும் போது தாளம் அதன்கண் அடங்கிவிடுகின்றது. அகவல், செப்பல், துள்ளல், தூங்கல் எனும் பாவுக்குரிய ஓசைகள் செவிப்புலனால் உணரப்பட வேண்டியன. இன்று நாம் இவற்றைப் பாவில் பயிலும் தளைகள் வாயிலாகவே அறிகின்றோம் என்றால் அது மிகையாகாது. இந்நிலை, என்னைத் தளை தாளத்தோடு ஒப்புமைப்பட்ட ஒன்றே என நினைக்கத் தூண்டுகின்றது.[4] பாவுக்குரிய சிறப்பு ஓசைகளைப் பிற்காலத் தலைமுறையினர் கேட்கத் தக்க வாய்ப்போ, ஒலிப்பதிவுக் கருவிகளோ இல்லாத முற்கால யாப்பிலக்கணர், அதனைத் 'தளை' என ஒன்றை வகுத்து அதன்மூலம் உணர்த்த முயன்றனர் போலும். தொல்காப்பியம் தளையைத் தனியுறுப்பாகக் கருதாமையும், சீர்கள் தொடரும்போதே ஓசை வெளிப்படுவதால் தளை தேவையில்லை எனக் கூறுகின்றமையும், இதனை இன்னும் வலியுறுத்துகின்றன.

உறுப்புக்களுள் அமையும் இத்துணைப் பொதுமை இரு மொழியின் பாப்பகுப்பிலோ, பாவமைப்பிலோ காணப்படவில்லை. தமிழ்மொழியின் தாக்குதல் மிக்கிருந்த காலத்திய இலக்கியங்களில் ஒப்புமை உள்ளமை தெளிகின்றது.

பா, பாட்டு, பாடல் எனும் சொற்கள் தமிழில் செய்யுளைக் குறிக்கப் பயன்படுகின்றன (வெண்பா, நெடுவெண் பாட்டு, பரி பாடல்). இவற்றில் பா என்பதே மூலவடிவம் எனக் கொள்ளலாம். மலையாளத்தில் 'பாட்டு' என்ற சொல் இதே பொருண்மையில் கையாளப்படுகின்றது. லீலாதிலகம் பாட்டை, திராவிட மொழிக்கே உரிய எழுத்துக்களாகி எதுக மோன என்பன பொருந்திய அமைப்பு என விளக்குகின்றது, இராம கதப் பாட்டு, கிளிப்பாட்டு, துள்ளல் பாட்டு, வஞ்சிப்பாட்டு முதலிய தொடர்கள் மலையாள இலக்கியத்தில் இச்சொல்லின் செல்வாக்கையும் பயன்பாட்டையும் சுட்டுகின்றன. பிற்காலத்தில் விருத்தம் என்ற சொல் பாவைக் குறிக்கும் பொதுப்பெயராகக் கையாளப்படுகின்றது. சீல், ஸ்லோகம் என்ற சொற்களும் இப்பொருண்மையையே குறித்து வருகின்றன.

தமிழ்ச்செய்யுள் பா-பாவினம் எனப் பகுக்கப் பெறுகின்றது. ஆசிரியப்பா, வெண்பா, கலிப்பா, வஞ்சிப்பா என்பனவும், வெண்பா வகையான பரிபாட்டும், ஆசிரியம், வெள்ளையின் மயக்

கத்தில் தோன்றிய மருட்பாவும் பாவின்கண் அடங்கும். பாக்கள் நான்கிற்கும் அமையும் தாழிசை துறை விருத்தங்கள் பாவினமாம்.

இத்தமிழ்ப் பாக்களோ பாவகைகளோ மலையாளத்தில் காணப்படவில்லை. தமிழ் வஞ்சிப்பாவும் மலையாள வஞ்சிப்பாட்டும் பெயரொப்புமை மட்டுமே காட்டுகின்றன. சில ஆய்வாளர் இரண்டிற்கும் அடிப்படை ஓசை ஒன்றே எனக் கருதுகின்றனர். இது எந்த அளவு உண்மையென்பது விரிவான ஆய்வுக்குப்பின் மட்டுமே விளங்கும்.

பாவினங்களுள் தாழிசை துறை என்ற விரண்டும் தமிழொழியப் பிறமொழிகளில் இருப்பதாகத் தெரியவில்லை. விருத்த மென்பது வடமொழியிலும் மலையாளத்திலும் காணப்படுகின்ற 'விருத்தத்'தோடு ஒப்புமையுடையது. விருத்தம் எனும் பெயரும் அச் செய்யுளும் வடமொழியிலிருந்து தமிழால் கடன் வாங்கப்பட்டது என்று பலர் கருதுகின்றனர்.[8] இது ஏற்றுக்கொள்ளத்தக்க தன்று.

பா-பாவினப் பகுப்புத் தமிழுக்கே உரியது. அகவல் முதலிய பாவகுப்பு வடமொழியில் இல்லை. தாழிசை, துறை என்பனவும் வடமொழியில் காணப்படவில்லை. இவை யனைத்தும் தமிழுக்கே உரிய தனித் தன்மைகள். பின் ஏன் விருத்தம் என்பதை மட்டும் கடன் பெற்றதாகக் கொள்ளல் வேண்டும்?

விருத்தம் என்பது விருந்து என்ற சொல்லிலிருந்து ஆக்கப் பட்டிருக்கலாம். வருந்து - வருத்தம், பொருந்து - பொருத்தம் என்பனவும் குருந்து - குருத்து என்பதும், 'ந்த்' 'க்த்' ஆக மாற்ற மடைவதையும் 'அம்' பொருள்வேறுபாடின்றி இணைவதையும் காட்டுகின்றன. விருந்து - விருத்தம் என்பதும் இத்தகையதே.

விருந்து என்ற சொல் புதுமை எனும் பொருளுடையது. புதிய ஏதேனும் ஒன்றைச் சுட்டி நிற்கின்றது. எனவே, ஒரு புதிய செய்யுள்வகை அவ்வாறு பெயர்சூட்டப் பெற்றது என்று கொள்ளலாம். பிற்காலத்தில் விருத்தம் என்ற சொல் விருத்தத்தை மட்டுமன்றிப் பிற பாவினங்களையும் குறிக்கும் பொதுச் சொல்லாகக் குறிக்கப்பட்டது என்று தோன்றுகின்றது பல பட்டடைச் சொக்கநாதப் புலவர், 'விருத்தம் என்னும் ஒண்பாவிற் குயர் கம்பன்' எனக் குறிக்கின்றார். கம்பனில் விருத்தத்தோடு

துறையும் கையாளப்படுகின்றது. நம்மாழ்வாரின் 'திருவிருத்தம்' கட்டளைக் கலித்துறையால் யாக்கப்பட்டது. புனிதர் ஜி.யு. போப் அவர்களின் 'A poets Catachism' என்பதில் 'விருத்தம்' என்பதன் கீழ், அளவொத்த நான்கடிகளையுடைய ஆசிரியவிருத்தம், கலித்துறை, கலிவிருத்தம், வஞ்சிவிருத்தம். வஞ்சித்துறை என்பன வனைத்தும் தரப்படுகின்றன.

விருந்து என்பதிலிருந்து விருத்தம் ஆக்கப்பட்டது என்பதற்கு இன்னுமொரு காரணம் உண்டு. தொல் விருந்து என்பதை 34 செய்யுளுறுப்புள் ஒன்றாகக் கொண்டது.

'விருந்தே தானும்
புதுவது கிளந்த யாப்பின் மேற்றே'.
தொல். 1495

இந்நூற்பா விருந்தை யாப்பின் வெளியீடாகக் கருதுகின்றது. யாப்பு என்பது இலக்கிய வகையையோ வடிவையோ குறிக்கலாம்; எனவே தொல்காப்பியத்திலோ சங்கவிலக்கியத்திலோ காணப்படாத இலக்கிய வடிவு - செய்யுள் அமைப்பு, விருத்தம் எனக் குறிக்கப் படுகின்றது எனக் கொள்ளலாம்*.

இது இப்போதைக்குக் கொள்கையளவினதே. ஆயினும், இதனை முற்றிலும் புறக்கணிக்கவோ மறுக்கவோ இயலாது. இது இன்னும் விரிவான ஆய்வுக் குரியது.

பாவினங்களும் பாஷா விருத்தங்களும் தம்முள் ஒப்புமை காட்டி நிற்கின்றன. இராமசரிதம், கண்ணச ராமாயணம் போன்ற மலையாள இலக்கியங்கள் தமிழ்விருத்தங்கட்குஇடமளிக்கின்றன. கலிவிருத்தம், கலித்துறை, அறுசீர், எழுசீர், எண்சீர், பதின்சீர் ஆசிரிய விருத்த வகைகள் என்பன இராமசரிதத்தில் காணப்படும் நாலடிப் பாவமைப்புக்கள். பிற்கால மலையாள இலக்கியங்களில் ஈரடிச் செய்யுளின் பயிற்சியே மிகுதி. பாஷா விருத்தங்கள் பெரும்பான்மையும் ஈரடியாலானவையே.

தமிழ்ப் பாவினங்கள் பெரும்பான்மையும் நாலடியால் அமைகின்றன; சில இரண்டடியால் ஆகின்றன. திரு. வாரியர், இராமசரிதத்தில் காணப்படும் பதினாறு விருத்த வகைகளைத் தமிழ் விருத்தத்தோடு பொருத்திக்காட்டுகின்றார் (பக்கம் 65-74). எதுகை, மோனை, அந்தாதி என்பன இந்நூலில் மிக்குப் பயின்றமையும் எடுத்துக்காட்டப்பெறுகின்றன. கண்ணச ராமாயணத்

தில் எதுகை ஒரு இன்றியமையாக் கூறாக முழுமையிலும் பயில்கின்றது ; மோனை அந்தாதி என்பன அந்த அளவு முதன்மை பெற்றில (பக்கம் 92). இந்நூலின் செய்யுட்களும், வடமொழி விருத்தங்களும் தமிழ்ப்பாவினங்களும்போல அமைகின்ற நாலடிச் செய்யுட்களே' கண்ணச்சன் தேர்ந்துகொண்ட யாப்பு வடிவம் அவர் நடைக்கு மெருகூட்டியது. அவர் பெரும்பான்மையாகக் கையாண்ட வடிவம் அவரே தோற்றுவித்தது ;[7] இன்று அது அவர் பெயரா லேயே வழங்கப்படுகின்றது. 'கண்ணச விருத்தம்' என நிரணம் விருத்தம் என்ற பெயரும் இதையே குறிக்கின்றது'[8] இவ் விருத்தத்திற்குத் திறனாய்வாளர் தரும் விளக்கம், இதனை எண்சீர் ஆசிரிய விருத்தத்தோடு ஒத்துவைத்து எண்ணத் தூண்டுகிறது.

இனி, தமிழிலும் மலையாளத்திலுமுள்ள விருத்தங்களையும், அவற்றின் தன்மைகளையும் அடிப்படையாக்கிப் பொதுமை யமைப்புக்களையும் ஒப்புமை நிலைகளையும் காண்போம்.

இரு மொழிச் செய்யுட்களும் நான்கடியும் ஈரடியும் பெறு கின்றன. ஆசிரிய விருத்தம், ஆசிரியத்துறை; கலிவிருத்தம், கலித்துறை ; வஞ்சிவிருத்தம், வஞ்சித்துறை, வஞ்சித்தாழிசை என்பனவனைத்தும் நான்கடிச் செய்யுளே. மலையாளத்திலுள்ள வடமொழிச் சார்பு விருத்தங்களனைத்தும் நாலடிச் செய்யுளாக அமையுமாற்றை விருத்த மஞ்சரி சுட்டுகின்றது.

தாழிசை, கண்ணி எனவும் குறிபெறுகின்ற தன்மையுடைய குறள் வெண் செந்துறை, குறட்டாழிசை, கலித்தாழிசை எனும் பாவினங்களும், குறள் வெண்பாகவும், சிந்து, கும்மி முதலிய பிற்கால வளர்ச்சி வடிவங்களும் பெரும்பான்மை ஈரடியால் இயல் கின்றவையே. (கலித்தாழிசை, சிந்து என்பன நான்கடியாலும் நடைபெறுகின்றன). பாஷா விருத்தம் பொதுவாக அடிவரை யறை பெறுவிடினும் பெரும்பான்மை ஈரடிச் செய்யுளே.

இவ்விரண்டு மொழியத் தமிழில் மூவடிச்செய்யுளும் உண்டு. சிந்தியல் வெண்பா, வெண்டாழிசை, ஆசிரியத்தாழிசை என்பன இத்தகையன. எழுத்தச்சன் மூவடிச் செய்யுட்களையும் கையாண் டமையைத் திரு. வாரியர் குறிக்கின்றார்.

தமிழில் பெரும்பான்மைச் செய்யுட்கும் (பா பாவகை, பாவி னம்) அடிவரையறை கருதப்படுகின்றது. வரையறை இல்லாதன தனித்துச் சுட்டப்படுகின்றன. மலையாள விருத்தங்கட்குப் பொது

நிலையில் இவ் வரையறை இல்லாவிடினும், சிறப்பு நிலையில் இரு மொழிச் செய்யுட்குமிடையே அடியெண்ணிக்கையில் பொதுமை அமைகின்றமை இங்கு நினைக்கப்படுகின்றது.

மலையாளத்திலுள்ள வடமொழிச் சார்பு விருத்தங்களான சந்தமும் தண்டகமும் தமிழ் இலக்கண இலக்கியங்களில் கருதப் பட்டமை முன்பே எடுத்து மொழியப்பெற்றது.[9]

தமிழ்-மலையாளச் செய்யுட்கிடையேயுள்ள பொதுமை பல இலக்கண வல்லுநராலும் இலக்கியப் புலவராலும் திறனாய்வாள ராலும் நினைக்கப்படுகின்றது கேரள கௌமுதி, விருத்த மஞ்சரி திராவிட விருத்தங்களும் அவயுடே தசா பரிணாமங்களும். "A Study of Malayalam Metres" விருத்தவிசாரம்-போன்ற பல நூற்களும் இத்துறையில் தொண்டுபுரிகின்றன. 'முக்கியமான மலையாள விருத்தங்கள் பலவும், இடைக்காலத் தமிழ்க் காப்பியத்தில் பயில்கின்ற யாப்பமைப்போடு மிக நெருங்கிய தொடர்புடையன. பெரும்பான்மையான மலையாளச் செய்யுட்களும் இடைக்காலத் தமிழ், செய்யுள் வடிவங்களிலிருந்து நேரடியாகத் தோன்றி யனவே' என முடிந்த முடிபாகக் கொள்கிறார் திரு. வாரியர்.[10] திரு. உள்ளூரவர்கள், இந்துவதன, குசுமமஞ்சரி, மல்லிக, தோடக எனும் விருத்த வகைகள் திராவிடமொழியில் தோன்றிப் பின் வட மொழியால் கடன்வாங்கிக் கையாளப் பெற்றது எனக் கொள் கின்றார்.[11] பேராசிரியர். பி. குஞ்ஞிக்கிருஷ்ண மேனோன் தமது பாஷா விருத்த தீபிகையில், மலையாள விருத்தங்கட்குத் தமிழோடு எந்த நிலையிலும் ஒரு நேரடித் தொடர்பும் இல்லை என நிறுவத் துடிக்கின்றார்; தன் நிலையில் ஓரளவு வெற்றியும் பெறு கின்றார். இது முரண் கருத்தேயாயினும் இங்குக் குறித்தல் தேவையே.

விருத்த மஞ்சரி, "A Study of Malayalam" என்ற இருநூற் களையும் அடிப்படையாக்கி, சீரும் கணமும் ஒன்று எனக்கொண்டு கீழ்வரும் பொதுமைக் கல்வி ஆக்கப்படுகின்றது.

1 கலிவிருத்தம் நாற்சீரடி நான்காலாயது, தாழிசை இரு நாற்சீரடிகளாலாக்கப்படலாம். இந்நிலையில்; நான்கு கணங்க ளோரடியிலுள்ள பாஷா, வடமொழிச் சார்பு விருத்தங்கள் ஒப்புமை யுடையனவாகக் கொள்ளப்படுகின்றன. அவை (1) காகளி (2) களகாஞ்சி (3) மணிகாஞ்சி (4) மிஸ்ர காகளி (5) ஊன

காகளி (6) த்ருத காகளி (7) ஸ்லத காகளி (8) பர்யஸ்த காஞ்சி (9) கீதாக்ர (10) மஞ்சரி (11) சர்ப்பிணி (12) ஸ்ரக்விணி (13) ஸ்வாகத (14) சுமங்கல (15) உபசர்ப்பிணி (16) கல்யாணி (17) புஜங்கப்ரயாதம் (18) தோடகம் என்பன. இவை தம்முள் ஒரே கணவெண்ணிக்கை பெறினும் எழுத்தெண்ணிக்கையிலும் மாத்திரைப்பேறிலும் வேறுபட்டுத் தனித்தனி விருத்த வகையாக உருப் பெறுகின்றன.

2 கலித்துறை அல்லது ஐஞ்சீரடி இரண்டலாய தாழிசை (1) சம்புடிதம் (2) அதிசம்மத (3) ஸ்திமித (4) மதனார்த்த (5) இந்துவதன (6) வசந்த திலகம் (7) அதிக காகளி என்பனவற்றோடு அமைப்பு ஒப்புமை யுடையன.

3 அறுசீராசிரிய விருத்தத்தையும், அறுசீரடித் தாழிசையையும், கீழ்வரும் விருத்த வகையோடு ஒருங்கு வைத்து எண்ணலாம், (1) கேக (2) அன்னனாட (3) ஹம்சப்புலுதம் (4) அஜகர கமனம் (5) அதிஸ்திமித (6) சங்கரசரிதம் (7) பஞ்சசாமரம் (8) மல்லிக.

4 எழுசீராசிரிய விருத்தம் எழுசீரீரடித் தாழிசை என்பன குசுமமஞ்சரியோடு ஒப்புமைகாட்டி அமைகின்றன.

5 எண்சீர் ஆசிரிய விருத்தமும் தாழிசையும் (1) தரங்கிணி (2) நிரண விருத்தம் (3) வடக்கன்பாட்டு விருத்தம் என்பனவும் வடிவ ஒப்புமை காட்டுகின்றன.

6 வஞ்சி விருத்தமும் அர்த கேகவும் ஒரே தன்மையின.

7 14 சீர் ஆசிரிய விருத்தத்தோடு குறத்தி தொடர்பு பெற்று வருகின்றமையை வாரியர் நவில்கின்றார்.

8 நம் ஆசிரியத்துறை, பல்லவிணி, சமாசமம் எனும் விருத்தங்களோடு ஒத்துச்செல்கின்றது.

திராவிட மொழிகளில் தமிழும் மலையாளமும் செய்யுளமைப்பில் பொதுமை காட்டி நிற்கின்றமையும் இருமொழியும் தமக்கே உரிய தனித்தன்மையை இழக்காது இயல்கின்றமையும் இதனால் விளங்குகின்றன.

குறிப்புகள் :

1 The regulated succession of certain groups of syllables, in which poetry is usually written is called metre – Chamber's Twentieth Century Dictionary- Revised edition-1961.

2 கேரள சாகித்ய சரிதம் (மலையாள நூல்) - உள்ளூர், எஸ். பரமேஸ்வர அய்யர்) Travancore University Series No. 30. First Impression. 1953. Pages 30, 67.

3 The Primary basic element of all verse is the line— Cassell's Encyclopaedia of Literature. Vol-1. Edited by S. H. Steinberg. First Published-1953.

4 எழுவகைத், தளைகள் இலக்கண ஆசிரியரால் கருதப் படுகின்றன. நல்லார் கொள்கைப்படி குரல், துத்தம் கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என நரம்பு புகள் ஏழு, இசையியலார் கூற்றுப்படி ச-ரி-க-ம-ப-த-நி என இராகங்களும் ஏழு. எண்ணிக்கையொப்பு மையும் அனைத்திலுமுள்ள ஓசையடிப்படைப்பொது மையும், என்னை இவைபற்றி இன்னும் நினைக்கத் தூண்டுகின்றன.

5 The Word Virutham in Tamil Prosody is a corruption of the Sanskrit term vritha and this type of stanza having four equal lines is probably an imitation of Sanskrit slookaas —A Study of Malayalam metre — N V. Krishna Warriar, B. O L., M.L.H, (Unpublished M. Litt. thesis) August, 1947 Page. 10.

6 டாக்டர் ஏ. சி. செட்டியாரவர்கள், கலித்தொகைப் பாக்களின் இடைநிலைப் பாட்டுக்களான தாழிசையே பிற்காலப் பாவினங்கட்கு வித்திட்டுக் களனாகவும் அமைந்தன எனக் கருதுகின்றமை இங்கு ஏற்றுக் கொள்ளப் படுகின்றது. Advanced Studies in Tamil Prosody—Dr. A. C. Chettiar, Annamalai University Publication—1943.

7 திரு வாரியார் வேறுவிதமாக நினைக்கின்றார்:- கண்ணச விருத்தம் கண்ணசனால் உருவாக்கப்பட்ட

தன்று என்று கருதுகின்றார். இராமசரிதத்தின் 51, 91 - செய்யுட்களில் அருகி வந்த அமைப்பே கண்ணச ராமாயணத்தில் பெருகிப் பயின்றது என முடிக்கின்றார்.

8 The metre of his (Kannasa's) choice has its part in shaping his style. This particular metre which he uses predominantly in the poem is practically his own finding and now widely known as Kannasa vritha or niranam vritha – Language of Middle Malayalam – Puthusseri Ramachandran. Dravidran Linguistic Association of India, Trivandrum. 1973. Page 74.

9 யாப்பருங்கல விருத்தி – மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை பதிப்பு. சென்னையரசு வெளியீடு – 1960. பக்கம் 367.
வீர சோழியம் — கழக வெளியீடு – 1970. நூற்பா 129.

10 The important metres (of Malayalam) have decided affinities with the metres of the Tamil Classics of the medieval period. Most Malayalam metres are direct descendants of Tamil metres of the middle ages—A study of Malayalam metre. Page 142.

11 Ibid. Page. 55.

12

மெய்ப்பாட்டியலில் 'இரச'க் கோட்பாட்டுப் பார்வை

தமிழண்ணல்

1.1 தொல்காப்பியரின் மெய்ப்பாட்டுக் கொள்கை தமிழ் இலக்கிய மரபு வழிபட்டது. பொருளதிகாரத்தை நுட்பமாக ஆராய்வார், அதன்கண் அகத்திணை ஒன்றனையே அடிப்படையாகக் கொண்டும் புறத்திணையை அதனோடு சார்பு படுத்தியுமே இலக்கணம் கூறப்படுகின்றதென்பதை நன்குணர்வர். உவமவியல் பொதுப்பட அமையினும் அதன் பிற்பகுதியில் உள்ளுறை பற்றியும் தலைவி, தோழி கூற்றில் அஃது அமையும் முறைபற்றியும் சிறப்பாக எடுத்தோதுவன அகம் பற்றியனவேயாம். மரபியலும் கருப் பொருளாட்சியுடைய அகத்திணையை நோக்கியே அமைக்கப்பட்டதென்பது போதரும். அவற்றைப்போல் மெய்ப்பாட்டியலும் பெரும்பான்மையும் அகத்திணைப் பாடல்களை நோக்கியே யாக்கப்பெற்றதென்பது அதன் அமைப்பை நோக்குவார்க்கு இனிது புலனும்.

வடமொழியில் பரத முனிவர் நாடகம் ஒன்றையே குறியாகக் கொண்டு பரத சாத்திரம் வகுத்தார். அதன்கண் அவர் குறிப்பிடும் இரசக்கோட்பாடு முழுதும் நாடகத்தையே நோக்கியதாகும். அவர் 'நாடகரசக் கோட்பாடு' என வகுத்ததைப் பிற்காலத்தவர் 'காவியரசக் கோட்பாடு' எனப் பகுத்து நோக்கியமை வடமொழி இலக்கிய வரலாற்றால் அறியப்படும். இது தொல்காப்பியருக்கும் பரத முனிவருக்கும் உள்ள அடிப்படை வேறுபாடாகும்.

1.2. 'பண்ணைத் தோன்றிய' என்று தொடங்குவதால் தொல்காப்பியர் 'கண்டும் கேட்டும் இன்பம் நுகரும் ஆடல்' பாட

-லிலும் நாடகத்திலும்' தோன்றுவது மெய்ப்பாடு என்பதை ஒப்புக்கொள்கிறார். ஆயினும் அவர் இதனை உலகியல் வழக்கை நாடகப் புனைவாக்கும் 'பாடல் சான்ற புலனெறி வழக்கிற்கே' அடிப்படையாகக் கொண்டார். செய்யுளிலுள்ள மெய்ப்பாட்டை விளக்குமிடத்தில் அவர்,

> ''உய்த்துணர்வு இன்றித் தலைவரும் பொருளான்
> மெய்ப்பட முடிப்பது மெய்ப்பாடாகும்''. (தொல் : 1460)

என்று கூறுவார். இதற்கு இளம்பூரணர், ''யாதானும் ஒன்றைக் கூறியவழி அதன்கட் பொருண்மையை விசாரித்துணர்தலன்றி அவ்விடத்து வரும் பொருண்மையானே மெய்ப்பாடு தோன்ற முடிப்பது மெய்ப்பாடென்னும் உறுப்பாம் என்றவாறு...செய்யுட் செய்வார் மெய்ப்பாடு தோன்றச் செய்தல் வேண்டுமென்பது கருத்து'', என விளக்கம் தருவார். அஃதாவது தொல்காப்பிய ரின் மெய்ப்பாட்டியல், பரதருடையதைப்போல அல்லாமல் முழுதும் இலக்கியத்தையே நோக்கியதென்பது இதனாற் பெறப்படும்.

மேலும் ''மெய்ப்பாடென்பது பொருட்பாடு; அஃதாவது உலகத்தார் உள்ள நிகழ்ச்சி ஆண்டு நிகழ்ந்தவாறே புறத்தார்க் குப் புலப்படுவதோராற்றான் வெளிப்படுதல்'' என்ற பேராசிரியர் விளக்கமும் ஈண்டுக் கருதத் தகும் நாடகத்தில் 'உய்ப்போன் செய்தது காண்போர்க்கு எய்துதல்' போல ஈண்டும் பாடற் கருத்து படிப்போருள்ளத்தில் மெய்ப்பாட்டை—சுவையை விளை விக்க வேண்டும். மெய்ப்பாடு என்ற தொடர் அகவுணர்வு புறத்தே உடம்பின்கட் தோன்றுவது என முதலிலும், பாடலின் உட்பொருள் புறத்தே தெளிவாகப் புலப்பட்டுப் படிப்பவர் அல்லது கேட்பவர் உள்ளத்தும் வெளிப்படுதல் எனப் பிறகும் வளர்ச்சி பெற்றுள்ளது. ''மெய்யின்கட் தோன்றுதலின் மெய்ப் பாடாயிற்று'' என இளம்பூரணரும் (சூ. 3) ''மெய்ப்பாடென்பது பொருட்பாடு'' என்று பேராசிரியரும் (சூ. 1) கூறுவனவற்றால் இதனை உய்த்துணரலாம்.

1.3. மெய்ப்பாடும் செய்யுள் உறுப்பெனத் தொல்காப் பியர் கொண்ட கருத்தை இளம்பூரணர் தெளிவாக விளக்குகிறார். ''அஃதேல், இவ் விலக்கணம் கூத்தினுள் பயன்படல் உண்டா தலின் ஈண்டு வேண்டாவெனின், ஈண்டும் செய்யுட் செய்யுங்காற்

சுவைபடச் செய்ய வேண்டுதலின் ஈண்டுங் கூறவேண்டுமென்க'' என்று அவர் குறிப்பிடுகின்றார் (சூ. 3).

நாடகம் கண்ணுக்கும் செவிக்கும் விருந்தாகும் என்று பரத முனிவர் குறிப்பிடுவது போலவே, தொல்காப்பியரும்,

''கண்ணினும் செவியினும் திண்ணிதின் உணரும்
உணர்வுடைமாந்தர்க்கு அல்லது தெரியின்
நன்னயப் பொருள்கோள் எண்ணருங் குரைத்தே (சூ : 27)

என்று கூறுகிறார். வாழ்க்கையாயினும் நாடகமாயினும் கண்ணாலும் செவியாலும் திண்ணிதாக உணரக்கூடிய மாந்தர்களுக்கே மெய்ப்பாட்டுப் பொருள்கோடல் எளிதாகும். மற்றையார்க்கு அரிதாகும். படைப்போரால் மட்டுமின்றிப் படிப்போராலும் உணரும் ஆற்றல் மிக்கு விளங்குமிடத்தேதான் 'மெய்ப்பாடு' வெற்றியுறும். எனவேதான் அங்ஙனம் ஏற்று, உணரவல்லவரை' 'சஹ்ருதயா' என அழைப்பர் பரத முனிவர்.

2:1. அபிநவகுப்தர் போன்றோரால் இரசானுபவம் என்பது, பரமனைக் கண்டறியும் காலத்தே அடியவரின் உள்ளத்தில் ஏற்படும் மகிழ்ச்சி வெள்ளம்போல, இவ்வுலகிற்கு அப்பாற்பட்டதோர் அழகுணர்ச்சி அனுபவமாகக் கொள்ளப்படுகின்றன. இவை 'அலௌகிக ரசம்' என அழைக்கப்பட்டு 'உலகியல் சாராத சுவை' எனப்படுகின்றன. ஆனால் இவ்விளக்கம் தொல்காப்பியரின் மெய்ப்பாட்டியிற்குப் பொருந்தாது.

தொல்காப்பியரின் அகத்திணைக் கோட்பாடு 'மக்கள் நுதலியது' ஆதலின், அவர் கூறும் மெய்ப்பாடுகள் உண்மையான வாழ்வில் நிகழ்வனவா அல்லது இலக்கியத்தில் இடம்பெற வேண்டியனவா என ஐயுறுமளவு உலகியலாக எடுத்துரைக்கப் பட்டுள்ளன. பரத முனிவர் வாழ்க்கையை 'ரூபகப்'படுத்தும் நாடகம்பற்றி அரங்கம், நடிகர், ஒப்பனை காண்போர் என்பன வற்றை மையமாகக் கொண்டு விளக்கம் தருகிறார். பிற்காலத்தில் இக் கோட்பாட்டை விளக்கியவர்களே இதனை உலகியல் சாராத உணர்வு நிலையோடு ஒப்பிட்டு விளக்கலாயினர்.

2:2 மேலை நாட்டுத் திறனாய்வாளர்கள் 'உணர்வுக் கூறு' (Emotional element) எனக் கூறுவதுடன் தொல்காப்பியரின் மெய்ப்பாட்டுக் கோட்பாடு பெரிதும் ஒற்றுமையுடையதாயிருப்

பதை, இதுகாறும் காட்டிய விளக்கங்களால் அறியலாம். ஒரு கவிதை எவ்வுணர்வு நிலையில் எழுதப்பட்டதோ அதே உணர்வு நிலையைப் படிப்பவர் உள்ளத்திலும் வெளிப்படுத்துவதைக் 'கருத்துத் தொடர்புறல்' (Communication) என்று கூறுவர். மெய்ப்பாட்டுக் கோட்பாடு இதனுடன் ஒற்றுமையுடையதாய்ப் படிப்பவர் உள்ளத்தே சுவையை விளைவிப்பதுதான் சிறந்த கவிதை என்ற இலக்கணத்தை நிலைநாட்டுகிறது.

3:1 மெய்ப்பாட்டியல் அமைப்பை நான்கு பிரிவுகளில் அடக்கலாம்.

1 – 12: நூற்பாக்கள்—அகத்திற்கும் புறத்திற்கும் பொதுவான மெய்ப்பாடுகள்.

13 – 24: நூற்பாக்கள்—அகத்திற்கே உரிய மெய்ப்பாடுகள்.

25 – 26: நூற்பாக்கள்—தலைவன் தலைவி பற்றியன

27ஆம் நூற்பா—உணர்பவர் திறம்.

முதல் பனிரெண்டு நூற்பாக்களும் ஒரு தொகுதி எனலாம். முதற்கண் மெய்ப்பாடு 32 ஆகவும், 16 ஆகவும் வகைப்படுத்தப் பட்டு இறுதியில் எட்டு எனச் சுட்டப்படுகிறது. இவை எட்டும் பிறக்கும் சூழல்களை வைத்து, ஒவ்வொன்றிற்கும் நான்கு வீதம் 32 காரணங்கள் கூறப்படுகின்றன. இறுதியில் அவை 32ஆம் ஒரு பகுதியாகப் பிறிதொரு 32 மெய்ப்பாட்டுக் கூறுகளும் எண்ணி யுரைக்கப்படுகின்றன.

3:2. 'பண்ணைத்' தோன்றுங்கால் (அஃதாவது நாடகத்தில்) முப்பத்திரண்டாகும்; அவையே இலக்கியத்தில் இடம் பெறும் போது எட்டாக அடங்கிவிடும் என்பதே முதல் மூன்று நூற்பாக் களின் கருத்தாகும். சுவைக்கப்படும் பொருள், காண்போன் பொறியுணர்வு, மனக்குறிப்பு; விறல் என நான்காக்கி எட்டி ேைடும் பெருக்கிக் காட்டுவர். இந்நாடக மெய்ப்பாடு இலக்கிய மெய்ப்பாடாகும்போது படிக்கப்படும் பாடல், படிப்பவர் மனக் குறிப்பு என இரண்டாகி விடுவதால் 32 என்பது 16 ஆக அடங்கு கிறது. இறுதியாக, படிப்பவர் உள்ளத்தே விளைவிக்கப் படுவதே சுவையாதலின் 8 என்றே தொகைபெற்று நிற்கின்றது. பாடலைப் படிக்கிறபொழுது அங்குக் காட்சி மனத்திரையில் ஓடுகிறது; மனக்குறிப்புத் தோன்றுகிறது. அஞ்சத்தகுவன கண்டு ஒருவன் படபடத்து ஓடிவருவது அச்சம்; அங்ஙனம்

அரங்கில் ஒருவன் நடித்து அச்சச் சுவையை விளைவிக்கக் கண்டு காண்போரும் அச்சுவை வழிப்படுவது அச்சச் சுவை; பாடலைப் படிக்கும்போது அச்சுவை தோன்றுவது கவிதை மெய்ப்பாடு எனலாம். எனவே மனக்குறிப்பும் சுவையும் ஒன்றாகி எட்டென்ற தொகை பெறுகின்றன எனலாம். இவ்வாறு நாடக மெய்ப்பாடு இலக்கிய மெய்ப்பாடாக மாறும் திறம் அழகுற எடுத்தோதப் பட்டுள்ளது.

3.3. பரத முனிவரும் இரசம் எட்டென்றே கூறுகின்றார். 'சாந்தம்' என்பது ஒன்பதாவது சுவையாக உருத்திரதர் என்பவரால் கி. பி. 9ஆம் நூற்றாண்டில் சேர்க்கப்பட்டதென்பர். பின் வந்த ஆனந்தவர்த்தனர் அபிநவகுப்தர் அனைவரும் இதனை ஏற்றுக்கொண்டனர். தமிழிலும் பிற்காலத்தில் செயிற்றியனார் போல்வார் சாந்தத்தை ஏற்றுக்கொண்டு ஒன்பதாக்கி உரைக்கலாயினர். பரதமுனிவர் சிருங்காரத்தில் தொடங்குவர்; தொல்காப்பியரோ 'நகை'யில் தொடங்கி அழுகையை அடுத்துவைத்துச் சிருங்காரமாம் உவகையை இறுதியில் வைத்துள்ளார். தொல்காப்பியர் வகைமை :

"நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகைஎன்று
அப்பால் எட்டே மெய்ப்பாடு என்ப" (தொல் : 1197)

பரத முனிவர் ஒவ்வொரு இரசத்திற்கும் ஒவ்வொரு ஸ்தாயீ பாவம் உண்டு என்று கூறியுள்ளார். இந்நிலையான மனவுணர்வு உலகப் பொதுவானது. ஒவ்வொரு மனித உள்ளத்திலும் பொதிந்து கிடப்பது. அதற்கு ஒரு தூண்டுகோல் ஏற்படும் பொழுது அது 'இரசமாக' வெளிப்படுகிறது. "மங்கிக் கிடப்பது ஸ்தாயி பாவம்; பொங்கி வெளிப்படுவது இரசம்" என்பர்.

	இரசம்	ஸ்தாயிபாவம்
1,	சிருங்காரம்	ராதி
2.	வீரம்	உற்சாகம்
3.	கருணை	சோகம்
4.	ஹாஸ்யம்	சிரிப்பு
5.	ரௌத்திரம்	குரோதம்
6.	பயானகம்	பயம்

7.	பீபத்சம்	ஜுகுப்சம் (வெறுப்பு)
8.	அத்புதம்	விஸ்மயம் (வியப்பு)

இவை தவிர 33 வியபிசாரி பாவங்கள் (நிலையற்ற மனவுணர்வுகள்) பரத முனிவரால் கூறப்பட்டுள்ளன. நகை முதலியன தோன்றும் 32 காரணங்களைக் கூறிய தொல்காப்பியர் அவற்றின் இறுதியில் மற்றொரு 32 மெய்ப்பாட்டு நிலைக்களன்களைக் கூறி "ஆங்கவை ஒருபாலாக ஒருபால் இவையும் உள" என்று முற்றிலும் முன்னையவற்றோடு சமமாகக் கூறுகிறார். இவற்றுள் சில மெய்ப்பாடுகளாகவே (நடுவுநிலை, அருளல், அன்பு) கருதத் தக்கன ; சில சுவை தோற்றவல்ல சூழல்கள் (உடைமை, கையறு நிலை, இடுக்கண்) எனத் தக்கன; மற்றும் சில துணை உணர்வுகள் (நாணுதல், அரற்று) எனத்தக்கன.

3.4. திரு. பி. திருஞானசம்பந்தன், தொல்காப்பியர் குறிப்பிடும் எட்டினையும் ஸ்தாயிபாவம் எனவும் பிற்கூறிய முப்பத்திரண்டினையும் வியாபிசாரி பாவம் எனவும் கருதுகிறார்.[1] பரத முனிவர் கூறும் 33 வியபிசாரி பாவங்களில் 12 மட்டும் இம் முப்பத்திரண்டில் ஒற்றுமையுடையனவாயுள்ளன என்பதும் அவர் தரும் சான்றாகும். (இன்புறல்-ஹர்சா, நடுவுநிலை-நிர்வேதா, நாணுதல்-விருதா, துஞ்சல்-நித்ரா போல்வன.) தொல்காப்பியர் கூறுவன மெய்ப்பாடாம் சுவையேயன்றி அவை ஸ்தாயி பாவம் ஆகா; பிற்பகுதியை வியபிசாரி பாவம் என்பதும் அத்துணைப் பொருந்துவதாகாது. பரதமுனிவர்,

''விபாவ அனுபாவ-வியபிசாரி பாவ—சம்யோகத் ரசா-நிஷ்பதீஹ்" என்று கூறுவர். அஃதாவது "விபாவம், அனுபாவம், வியாபிசாரிபாவம் மூன்றும் கூடிக்கலந்துவிடத்துத் தோன்றுவதே ரசம்" என்பதாகும். இரசவுணர்வு என்பது ஸ்தாயி பாவமாக மனித உள்ளமனைத்திலும் அடித்தளத்தே இருப்பதாகும். அதனைத் தூண்டி வெளிப்படுத்தும் ஒரு நிகழ்ச்சி தோன்றியவிடத்தே விபாவம்-அனுபாவம்-வியபிசாரிபாவம் மூன்றும் கலந்து இரசம் வெளிப்படும்.

---

1 P. Thirugnanasambandan, A study of Rasa-Tholkappiyar and Bharata, Proceedings of the first International Conference Seminar of Tamil Studies, Kuala Lumpur, 1966 P. 17.

இரசவுணர்வு இப் பாவங்களால் தோற்றுவிக்கப்படுவதன்று; அது என்றுமுளது. ஆனால் வியபிசாரி பாவங்கள் தோன்றவும் மறையவும் கூடியன; நிலையற்றவை என விளக்குவர். இன்றைய உளவியல் அறிஞர்களோ இவையனைத்தையும் சுவையுணர்வு நிலைகளாகக்கோடலே யன்றி, இவற்றுள் வேறுபாடுகள் காணுதல் அரிதென்கின்றனர்.[1]

4.1. மெய்ப்பாட்டியலின் இரண்டாம் தொகுதி 12 நூற்பாக்கள். அவற்றுள் முதல் ஆறு மெய்ப்பாடுகள் களவுக்குரியன. அவற்றுள்ளும் முதல் மூன்று தொகுதிகளைப் புணர்ச்சிக்கு முந்திய மெய்ப்பாடுகள் எனவும் அடுத்த மூன்று மெய்ப்பாடுகளைப் புணர்ச்சிக்குப் பிற்பட்டன என்றும் பேராசிரியர் குறிப்பிடும் விளக்கம் அறிந்து இன்புறத்தக்கதாகும். இவை "மன்னிய வினைய நிமித்தம்"—திருமணத்திற்குக் காரணமான மெய்ப்பாடுகள் எனப்படுகின்றன. உயிர் மெலியுமளவு காதல்நோய் மிக்க 'விடத்து, இம் மெய்ப்பாடுகள் ஒருதன்மைப்பட நிகழா எனவும் திருமணச் சடங்கு நிகழாமல் உடன்போக்கு நிகழும் எனவும் ஆசிரியர் உய்த்துணர வைக்கின்றார். 'கொடுப்போரின்றியும் கரணம் உண்டே' (2) என்ற கற்பியல் நூற்பாவை இது நினைவூட்டுகிறது. இவை தவிரப் பொதுவான களவு மெய்ப்பாடுகளாகச் சிலவற்றை "இன்பத்தை வெறுத்தல், துன்பத்துப் புலம்பல்—" என்ற நூற்பாவில் குறிப்பிடுகிறார்.

'முட்டுவயின் கழறல், முனிவு மெய்ந்நிறுத்தல்' என்ற நூற்பா மூலம் வரைவுக்கு நிமித்தமான மெய்ப்பாடுகளும், "தெய்வம் அஞ்சல், புரையறந்தெளிதல்" என்ற நூற்பாமூலம் வரைந்தெய்தியபின் கற்பு வாழ்க்கையில் ஏற்படும் மெய்ப்பாடுகளையும் தொல்காப்பியனார் வரன்முறைப் படுத்துகிறார்.

4.2. இவை அனைத்தும் அகத்திணையில் தலைவிக்கே சிறப்பாக உணர்த்தப்படினும், சிற்சில தலைவனுக்கும் ஏற்றிக் காணத்தக்கனவாகும், தொல்காப்பியர் தலைவிக்கு உரியன, தலைவனுக்குரியன, இருவருக்கும் பொதுவானவை எவையெவை என்பதை நாமே உய்த்துணருமாறு விட்டுவிட்டார். தலைவி மெய்ப்பாடு என்றோ தலைவன் மெய்ப்பாடு என்றோ அவர் ஓரிடத்திலும் பிரித்துச் சுட்டவில்லை. பரத முனிவருக்கு இவ்வாறு விளக்க

1 Rakesh Gupta, Psychological Studies in Rasa.

வேண்டிய சூழ்நிலை இல்லாது போயிற்று. தமிழ் அகத்திணை மரபைப் போற்றிய தொல்காப்பியர் உளவியலறிஞரும் ஒப்பிட்டு ஆராயக்கூடிய அளவிற்கு இப்பாலியல் தொடர்பான மெய்ப்பாடு களை வரிசைப்படுத்தி, காலமுறைப்படியும், வாழ்வு வளர்ச்சிநிலை முறைப்படியும் கூற முயன்றுள்ளார் களவு மெய்ப்பாடுகளே கற்பிலும் மிகுதியாகக் கூறப்பட்டிருப்பதும் களவு மெய்ப்பாடு களையும் வரிசைப்படுத்தி இருக்கும் முறையும் ஆராயத் தக்கனவாகும்.

4 3. பரத முனிவரின் புகழ்பெற்ற சூத்திர விளக்கமும் மெய்ப்பாட்டியலில் ஓரளவு ஏற்றிக் காணத்தக்கதாகும். விபாவம் என அவரால் குறிப்பிடப்பட்ட ஆலம்பன விபாவம், உத்தீபன விபாவம் இரண்டும் மெய்ப்பாட்டைத் தோற்றுவிக்கும் சிறப் புடையன ஆகும். அவற்றுள் ஆலம்பனம் என்பது யார்பற்றி– யாருக்காகச் சுவை பிறக்கின்றதோ அவரைக் குறிக்கும். சிறப் பாகத் தலைவன் தலைவியரையே அது சுட்டும் என்பர். தலைவ னுக்காகத் தலைவியும் தலைவிக்காகத் தலைவனும் ஆலம்பன விபாவமாவர் பிற பாத்திரங்கள் எல்லாம் இவர்கள் இருவருக் காகவே என்பதும் இவர்கள் இருவருமே சுவைத்தோற்றத்தில் அடிப்படைக் கரணிகளாவர் என்பதும் நினைவுகூரத்தகும்.

அகத்திணை இலக்கியத்திலும் தலைவன் தலைவியரே தலைமை யிடம் பெறுகின்றனர். ஒவ்வொரு அகப்பாடற் கருத்தும் இவர் கள் இருவரைச் சுற்றியே நிகழ்தலால் சுவைத்தோற்றத்திற்கு இவர்கள் இருவருமே மூலகாரணமாய் இருப்பதை அப்பாடல்களை நன் கு ஊன்றிக் கற்பார் உணர்வர். இதனை மனங்கொண்டால் தொல்காப்பியர் மெய்ப்பாட்டியல் இறுதியில் தலைவன் தலைவி யிடையே இருக்கவேண்டிய பத்து ஒப்புமைகள்பற்றி ஒரு நூற் பாவும் அவர்கள் இருவரிடத்தும் இருக்கத்தகாத பண்புகள் பனிரெண்டு பற்றி ஒரு நூற்பாவும் ஏன் அமைத்தார் என்பது விளங்குகிறது. களவியலில் "ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப' (2) என்றார். இவண் அவ் ஒப்புமைகளை உடன்பாட்டு முகத்தானும் எதிர்மறை முகத்தானும் கூறுகிறார், பிறப்பு, குடிமை, ஆண்மையும் பெண்மை நலமும், வயது, உருவம், காம வாயிலாம் உணர்வுநிலை, நிறை, அருள், உணர்வு, திரு என்பன வற்றால் ஒத்திருத்தல் சிறப்பாகும். பொறாமை, கொடுமை, தன்னை வியத்தல், புறங்கூறல் வன்சொற்பேசுதல், உறுதியின்மை,

சோம்பல், தம் குடியுயர்வையே நினைதல், ஒருவரினும் ஒருவர் தாமே இன்புறுவதாக நினைதல் அறிவின்மை, மறதி, தலைவன் தலைவியையோ தலைவி தலைவனையோ பிறரோடு ஒப்பிட்டுப் பார்த்தல் என்று இவையெல்லாம் இருத்தல் கூடாது. இத்தகைய தலைவன்தலைவிரியடையே தான்முற்கூறிய அகத்திணை மெய்ப்பாடுகள் முறையே நிகழுமென்பதும் மற்றையவரிடத்தெல்லாம் சில நிகழ்ந்தும் நிகழாதும் மாறுபடும் என்பதும் உய்த்துணரற்பாலதாகும்.

ஏன் மெய்ப்பாட்டியலில் தலைவன் தலைவிபற்றி ஒப்புமையும் ஆகாதனவும்—கூறினர் எனப் பலரும் வினவுவதுண்டு. அவர்கள் பரதமுனிவரின் விபாவம்பற்றி நன்கு அறிந்திருப்பின் இதன் இன்றியமையாமை இனிது விளங்கும். வடமொழி இலக்கிய வளர்ச்சியும் தமிழிலக்கிய வளர்ச்சியும் வரலாற்றுக் காலத்துக்கு முன்பு தொட்டு நெருங்கிப் பிணைந்து வளர்வனவாதலின் அவை நாடகமாயினும் இலக்கியமாயினும் தலைவன் தலைவியையே மையமாகக் கொண்டு நிகழும் ஓர் அடிப்படைப் பண்புடையன வாதல் உணரத்தக்கதாகும்.

4.4. இதன்கண் உத்தீபன விபாவம் என்பது சுவை வெளிப்பாட்டிற்குத் தேவையான சூழ்நிலையை, பின்னணியைச் சுட்டுகிறது. தலைவியின் தனிமை, சோலையாகிய இடம், நிலவு பொழியும் இரவு நேரம், தென்றற் காற்றுப் போல்வன உத்தீபன விபாவம் என்பர். அகத்திணைப் பாடல்களில் வரும் முதல் கரு உரி அமைப்பை இது நினைவூட்டுகிறது. முதலும் கருவுமாகிய இயைபுப் பின்னணியை உத்தீபனம் என்றும் உரிப்பொருளை ஆலம்பனம் என்றும் நாம் எளிதாகப் பிரித்துக் கூறலாம். தொல்காப்பியர் அகத்திணை இயலிலேயே முதல் கரு வுரி அமைப்பைக் கூறிவிட்டதனல் மெய்ப்பாட்டியலில் இதுபற்றி எதுவும் கூற வில்லை.

4.5. அனுபாவம் என்பது மெய்ப்பாடாகும். இதனையே மெய்ப்பாட்டியலில் உள்ள இரண்டாவது தொகுதி (12 நூற்பா) கூறுகிறது. உடம்பில் தோன்றும் சத்துவங்களாகிய வேறுபாடுகளே அன்றிப் பாடலால் உணரப்படும் சுவையும் 'அனுபாவமே' யாகும்.

4.6. வியபிசாரிபாவம் என்பது 'நிலையற்ற மனவுணர்வுகள்' என்பர். தலைவனை எதிர்பார்த்துக் காத்திருக்கும் தலைவி சிறிது 'கணம் அவன் முதல்நாள் தன்னைத் தழுவியதை நினைத்து மகிழ்

வாள்; மறுகணம இன்னும் வராதது குறித்துச் சினப்பாள்; அவன்மீது வெறுப்போடு நினைப்பாள்; பிறகு வரும் வழியில் என்ன ஆயிற்றோ என்று கவல்வாள். இவை எல்லாம் கூடி 'அவலம்' என்ற சுவையாகும். இவற்றுள் முதலிற் கூறியன அனைத்தும் வியபிசாரி பாவங்கள்; அதனால் வெளிப்படும் அவலம் இரசமாகும். வியாபிசாரி பாவங்கள் அடிக்கடி நிலைமாறுவன; காரணம் நீங்கியதும் தாமும் நீங்கிவிடுவன. ஆனால் இரசங்களோ அங்ஙனம் நிலைமாறாது. மனிதனின் உள்ளத்துள்ளேயே ஸ்தாயி பாவங்களாக, 'வாசனை' என்ற பழக்கத்தால் நிலைநிற்பன. காரணங்களும் தக்க சூழல்களும் ஏற்பட்டதும் அவை வெளிப் பட்டு ஒளிவீசுகின்றன. காரணங்கள் நீங்கிய பின்னும் அவை பெட்டிப் பாம்புபோல் உள்ளடங்கியே இருப்பன, மறைவன அல்ல. ஸ்தாயி பாவத்திற்கும், வியபிசாரி பாவத்திற்கும் இங்ஙனம் கூறக்கூடிய வேறுபாட்டை இன்றைய உளவியலறிஞர் முழுதும் ஒப்புவதில்லை. எல்லாம் மனவுணர்வும் மெய்ப்பாடு களுமே என்றும்; சில எளியன; சில அழுத்தமானவை என்றும் மட்டுமே வேறுபடுத்தலாம் என்றும் கூறுவர். தொல்காப்பியர் மெய்ப்பாட்டியலில் இரண்டாம் தொகுதியாக அமைத்துக் 'களவு, கற்புக்குரிய' மெய்ப்பாடுகளாகப் பனிரெண்டு சூத்திரங்களிற் கூறுவனவற்றை நாம் 'அனுபாவம்' என்றும் 'வியபிசாரி பாவம்' என்றும் அடக்கிக் காட்டலாம். அவை ஒருபடித்தாக நிகழ்வன வல்ல; அடிக்கடி மாறுவன; உணர்வு நிலை மாறிக்கொண்டே இருப்பதை உணர்த்தும் பல்வேறு துணை மெய்ப்பாடுகளாகும்.

4.7. எனவே தொல்காப்பியர் தரும் மெய்ப்பாட்டியல், கீழ் வருவனவற்றைத் தருகிறதென்பது தெளிவு:

1 மெய்ப்பாட்டுக் கோட்பாடு நாடகத்திலிருந்து இலக்கி யத்திற்குப் பெறப்பட்டது.

2 அதனைப் படைப்பவரும் 'உய்த்துணர்வு இன்றி, தலைவ ரும் பொருளால் மெய்ப்பட' முடிக்கவேண்டும்; படிப்ப வரும் 'கண்ணினும் செவியினும் திண்ணிதின் உணரும் உணர்வுடை மாந்தராய்', மெய்ப்பாட்டுப் பொருள் கோளை எளிதாக உணரவல்லவராக இருக்கவேண்டும். அஃதாவது நாடகம், உலகியல் ஆகியவற்றில் ஊன்றிப் பழகிய சுவையுணர்வுடையாரே மெய்ப்பாட்டு நலமிக்க கவிதைகளை யாக்கவும் முடியும்; படித்துச் சுவைக்கவும் கூடும்.

3 மெய்ப்பாட்டுக் கோட்பாட்டிற்கு ஒப்புமையுடைய, தீய பண்புகளில் நீங்கிய தலைவன் தலைவியர் மிக இன்றி யமையாத அடிப்படைக் கரணியம் ஆவர்

4 நாடகத்தில் முப்பத்திரண்டாகும் இம் மெய்ப்பாடு, இலக்கியத்தில் **எட்டு** என்னும் எண்ணிக்கையில் நிறைவுறும்.

5 இவை எட்டிற்கும், ஒவ்வொன்றிற்கும் நான்கு வீதம் முப்பத்திரண்டு சூழ்நிலைகள் அல்லது மனநிலைகள் உண்டு. நான்குமட்டுமே என்பது முடிவன்று. இது போன்ற சூழல்கள் என்பதற்கே ஆசிரியர், நான்கு நான்கு உதாரணங்கள் தருகிறார் எனக் கோடல் பொருந்துவதாகும்.

6 எட்டு, முப்பத்திரண்டு என்ற எண்ணிக்கை மட்டு மன்றி, சுவையும் சுவை தோன்றும் காரணங்களும் மேலும் பலவாக விரிதல் கூடும் என்பதை "ஆங்கவை ஒருபாலாக ஒருபால்" என்ற நூற்பாவில் மேலும் ஒரு 32 வகைகள் கூறுவதன் மூலம் ஆசிரியர் விளக்குகிறார். பரதமுனிவர் கூறும் வியபிசாரி பாவம் 33—கும் இதற்கும் சில சொற்பொருள் ஒற்றுமைகள் இருப் பினும் இவற்றுள்வரும் அன்பு, அருள்முதலினயவற்றை 'வியபிசாரி பாவங்க'ளாகக் கோடல் பொருந்தாது. வடமொழியில் இவற்றைத் தனிச் சுவைகளாகவே கணக்கிடும் மரபும் பிற்காலத்தில் வளர்வதாயிற்று.

7 அகத்திணைக்கேயுரிய மெய்ப்பாடுகளைத் தலைவியைச் சார்புபடுத்திப் பனிரெண்டு நூற்பாக்களில் கூறுகின் றார். களவுக்கால மெய்ப்பாடுகள் 24. அதன்கண் பொதுவான மெய்ப்பாடுகள் 20. வரைவுக்கு நிமித்த மானவை 8. வரைந்தெய்தியபின் கற்புக்குரியன 10. இந்த 62 மெய்ப்பாடுகளையும் அனுபவம் என்றும் வியபிசாரி பாவம் என்றும் கூறலாம். இம்முறை பரதமுனிவரிடம் காணாதது அகத்திணை மரபுவழி நின்று இலக்கியக் கொள்கை வகுத்த தொல்காப்பியருக்கே உரியது.

8 பரத முனிவர் கூறும் "விபாவகம்" (ஆலம்பன மும் உத்தீ பனமும்) தமிழில் உள்ள முதல், கரு, உரி அமைப்புடன் ஒப்பிடத்தக்கதாகும்.

5.1. "இவ்விரண்டு கோட்பாடுகளையும் ஒப்பிடின் இவை இரண்டுமே ஒரு பொது மூலத்திலிருந்து வந்தவை என்பது புலனாகும். இரசக் கோட்பாட்டிற்குப் பாவங்கள் உட்பட ஆரியர், திராவிடர் அளித்த கூறுகளைப் பகுத்துச் சீர்தூக்கின் அதற்குப் பின்னையவர் பங்கு எவ்விதத்திலும் குறைந்ததன்று என்று தோன்றுகிறது", என்று திரு. பி. ஞானசம்பந்தம் கூறக் காண் கிறோம்.[1]

பரத முனிவரும் தமக்கு முன்னரே இரசக் கோட்பாடுபற்றி விளக்கியவர்களைப் 'பூர்வாசாரியர்' எனக் குறிப்பிடுகிறார். இராஜசேகரர் தமது காவியமீமாம்சையில் நந்திகேசுவரரே முதன் முதல் இரசக் கோட்பாட்டை விளக்கியதாகக் கூறுகிறார். தொல்காப்பியரும் 'என்ப' 'மொழி' எனவும் "என்றிசை இன்மை என்மனார் புலவர்" (26) என்றும் தமக்கு முற்பட்டோர் பலர் இக் கோட்பாட்டைக் கையாண்டிருப்பதைச் சுட்டுவர். எனவே ஒருவரிடத்து இருந்து ஒருவர் கோட்பாட்டைக் கடன் பட்டதாகக் கூறுவது பொருந்துவதன்று. கோட்பாடு பொது— அதற்கு இருவருடைய பங்கும் உண்டு. அதனால் ஒற்றுமைக் கூறுகள் சில காணப்படுதல் இயல்பே. ஆயினும் இருவரும் தத்தமது இலக்கிய நோக்கிற்கும் போக்கிற்கும் ஏற்பத் தனித் தன்மையுடன் இக் கோட்பாட்டை விளக்கியுள்ளனர். இவ் ஒற்றுமை வேற்றுமைகளை ஒப்பிட்டுக் கற்குங்கால் நமக்கு மேலும் மேலும் இக் கோட்பாடு தெளிவுறுகிறது என்பதே இவண் குறிப்பிடத்தக்கதாகும்.

---

1. "A Comparative study of these two may at best suggest that they are heir to a common heritage. If we are to apportion the contribution of the Aryans and Dravidians to the conception of Rasa, which includes in its scheme Bhavas also, the contribution of the latter appears to be by no means.

A Study of Rasa-Tholkappiyar and Bharata, Proceedings of the first International Conference Seminar, Kuala Lumpur, 1966, P. 11.

13

மலைக்காட்சி ஒரு விளக்க இயல் ஒப்பாய்வு

இராம. குருநாதன்

1.1. நிலத்தைப் பெண்மையாகக் கூறுவது கவி மரபு. கடலை நிலமடந்தையின் ஆடையாகவும்[1], மலையை நகிலாகவும் கூறுவர்.[2]

1.2. மலைகள், மண்ணில் இயற்கை நிலையாக எழுப்பிய வலிமைமிக்க தூண்கள்; நிலத்தின் அழியாத சிலைகள்; வலிமையெல்லாம் திரண்டெழுந்து யாரும் அசைக்க இயலா வல்லரசுகள்; உயர்ந்த எண்ணங்களின் உவமைகள்; மழைநீரின் கொடை வள்ளல்கள்; ஆற்றுநீரின் ஊற்றுக் கண்கள்; இயங்குதிணைகளின் மேய்ச்சல் களம்—இவை அனைத்திற்கும் மேலாக இயற்கை அன்னையின் எழில் கெழுமிய அழகுத் திருக்கோயில்.

1.3. மலைகள், மலைபடு பொருள்களைப் பெற்றுத் துய்ப்பதற்கும், மண்ணியலாய்விற்கும், முருகியல் இன்பம் நுகர்தற்கும், மலை ஏறி உயர்ச்சி அறிதற்கும் பாந்தனை ஈர்த்தது எனலாம்.[3]

1.4. இயற்கையின் எழிலைக் கேட்டு கண்டு, உண்டு, உயிர்த்து, உற்றறிந்த தமிழருள்ளம் மலையினைப் போற்றியது. அதன் இயற்கைச் செல்வங்களை நுகர்ந்து வெளியிட்டது.

1.5. தமிழர்கள் மலையை வியப்பாகக் கண்டனர். வாய்ந்த மலையை நாட்டிற்கு உறுப்பாகக் கொண்டனர்.[4] இயற்கை யரணாக மலை, இருப்பதை உணர்ந்தனர்.[5] ஆன்றோருக்கு மலையை உவமையாகக் கொண்டனர்.[6] மலையையும், அதன் உயர்ச்சியையும், பரந்த தோற்றத்தையும், மலை தன்னகத்தே கொண்ட அருவியையும் கண்டு அவற்றில் உலகியலைப் பெய்கிறார் ஒரு புலவர்.[7]

2.1. மேல்நாட்டினர் தொடக்க காலத்தில் மலையைப்பற்றிய சிந்தனையில் மிகுந்த நாட்டம் செலுத்திக் கவி பாடினரில்லை ஆயின், மலைபற்றிய தங்களது உணர்ச்சியைக் கவி வடிவில் வடித்ததை எண்ணாமல் இருக்க இயலாது. தொடக்க காலத்தில் அவர் தம் நோக்குணர்ச்சியும், மலைபற்றிய காட்சி இன்பத்தில் விழைவில்லாதிருந்தமையும் தெரியவருகின்றன. மலைப் பயணம் மேற்கொள்கையில் கவிஞர்கள் மலைபற்றிய ஆய்வில் ஈடுபடின் வெறுப்புணர்ச்சியே மிகும் என்றுணர்ந்திருந்தனர். ஆல்ப்ஸ் போன்ற உயர்ந்த மலைகளையும் இவர்களது வெறுப்புணர்ச்சிக்கு ஆளாயின.

2.2. மலை, இயற்கையின் கொடிய-பெரிய தோற்றத்தினது என்றும், அருவருக்கத்தக்கதான தோற்றத்தினது என்றும் ஒவல் (Howell) என்பவர் குறிப்பர்.[8] ஆல்ப்ஸ் மலை இனிமைக்கும், நுகர்ச்சிக்கும் தடையாக இருப்பதை ஜான் எவிலின் (John Evelyn) என்பவர் உணர்த்துவர்.[9] ஒழுங்கற்ற தோற்றமுடைய ஆல்ப்ஸ் மலைக்காட்சி அடிசன் (Addison) என்பார்க்கு அவ்வளவாக மகிழ்ச்சியை அள்ளித் தரவில்லை.[10] அட்சின்சன் (Hutchinson) என்பார் ஸ்டைன்மோர் மலையைப்பற்றியும், அதன் தோற்றத்தைப்பற்றியும் குறிப்பர்.[11] வெஸ்ட்மோர் மலையை அருவருக்கத்தக்கதாகவும், கொடிதாகவும் காண்பர் தாமஸ் அமோரி (Thomas Amory) என்பவர்.[12] மலையை அழகில்லாத தோற்றத்தினது என்றும் கலையழகு குன்றியது என்றும் கூறுவர் பிளாக்மூர் (Blackmore) என்பவர்.[13] இவ்வாறு மலையைப் பயனற்றது என்றும், நிலத்தின் பரப்பில் உருக்குலைந்த தோற்றத்தினது என்றும் பலபடக்கருதி அக்கறைக் காட்டவில்லை என்பர்.[14] ஆல்ப்ஸ் மலையைக் குறிப்பிட்டவர்கள் அதன் தோற்றத்தை 'Dreadful' என்றும், 'horrid mountains' என்றும், 'sublime' என்றும், அதன் பரப்பை 'vast' என்றும், 'horrid vast sublime' என்றும் குறித்தனர்.

2.3. மலையை விழைந்து போற்றிய கவிஞர்கள் மலை வளத்தின் அழகில் தோய்ந்து, கவியாத்தனர். மலைதரும் எழிலைத் தம் கவிதையில் குறித்தனர். பென்னியூக் (Pennecuik) என்பார் டுவீடேல் (Tweedale) மலையைக் கண்டு அதன் பசுமையையும், அது தரும் மனக்களிப்பையும் எண்ணுவர்.[15] மலையில் அமைதியும் மென்மையும் குடிகொண்டிலங்குவதைக் குறிப்பர்

டிக்கல் (Tickell) என்பவர்.[16] புகழ்வாய்ந்த உயரிய மனிதனின் பண்புகளை உயர்ச்சியை உடைய மலை நினைப்பூட்டுவதாகக் காண்பார் பெட்ரார்க் (Petrarch) என்பவர்.[17] புயலையும் எதிர்த்துப் போராடவல்ல மலையின் ஆற்றிய போற்றுவர் பர்னெல் (Burnell) என்பவர்.[18] கண்ணுக்கு விருந்தளிக்கும் மலர்கள் நிறைந்த மலையினைப் புகழ் விளங்க எடுத்துரைப்பர் ஜான்சன் (Johnson) என்பவர்.[19]

2.4. வேட்சுவொர்த்து, கீட்சு, பைரன் போன்ற கவிஞர்கள் இயற்கையைப் பெரிதும் போற்றியவர்களெனலாம். மலையைப் பெரிதும் போற்றிப் பாடியவர்களில் முன்னணியில் நிற்பவர் வேட்சுவொர்த்து ஆவார். இளமையில் அவர் வாழ்ந்த மலைச் சூழல் அவரைக் கவர்ந்தது. மலையின் பசுமையும், தன்மையும் அவரது கவி உள்ளத்தின் ஊற்றுக் கண்ணைத் திறந்துவிட்டது. அழகில் தனக்குள்ள ஈடுபாட்டைத் தெரிவிக்கிறார்.[20] தனது எண்ணத்தின் இன்ப விழைவாக மலையினைக் காண்கிறார்,[21] மலை தனக்கு வழிகாட்டியாக இருப்பதை உணர்கிறார்.[22] மகிழ்ச்சி ஆங்குத் தவழ்வதைத் தருகிறார். இவ்வாறு மலைமீது தனக்குள்ள உணர்வையெல்லாம் வெளியிடுகிறார்.[23] வேட்சுவொர்த்து மலைகளின் கவிஞர் (A Poet of Mountains) எனப் போற்றப் படுபவர்.[24] வேட்சுவொர்த்தைவிட, பிற கவிஞர்கள் மலைபற்றிய உணர்வை அவ்வளவாகப் பெற்றதில்லை என்ற கருத்துடையவர், திறனாய்வில் துறை போகிய பிராட்லி (Bradley) [25] என்பார்.

2.5. பைரன் தனக்குள்ள மலைபற்றிய உணர்ச்சியை வெளியிடுகிறார்[26] இவ்வாறு மலைகளில் தாம் பயின்ற இனிய நுகர்ச்சியினை முருகியல் சுவைபட எடுத்துரைப்பர்.

3.1. தமிழ்க் கவிஞர்கள் மலையைப்பற்றிய உணர்வுமிக்கவர் மலைவளத்தைக் குறிஞ்சிச் செல்வமாகக் கண்ட புலவர்கள் மலை இன்பத்தில் ஆழ்ந்து கவிதை யாத்தனர். மலைவளம் மிக்குப் பாடிய கபிலர் இயற்கை நலத்தில் மலைபற்றிய செறிவினைப் பொலிவு பூக்கப் பாடியுள்ளார். மலைவாழ்க்கையரான கபிலரின் பாடல்களில் புறம்பு வேறு, தான் வேறு என்று நோக்காது அதனிடத்து இரண்டறக் கலந்து ஒன்றிப்பாடிய தன்மையைக் காண முடிகிறது.

3.2 தமிழ்க்கவிஞர்கள் மலையின் உயர்ச்சியைப் பாடியிருக்கின்றார்கள். மலைதரும் அருவியைப் போற்றியிருக்கின்றார்கள். மலைமேல் மேகக்கூட்டங்கள் தவழ்வதைக் கண்டு இன்புற்றிருக்கின்றார்கள். மலையின் சுனையால் தண்ணென் உணர்வு பெற்றிருக்கின்றார்கள். மலையில் மலரும் மலர்க்கூட்டங்களின் எழிலில் மணம் நுகர்ந்திருக்கின்றார்கள்.

4.1 ஆல்ப்ஸ் (Alps), ஸ்னோடன் (Snowden), பிளின்லிமான் (Plinlimmon) போன்ற மலைகள் ஆங்கிலக்கவிஞர் நெஞ்சில் கவினுறக் காட்சியளித்தமை போலத் தமிழ்க்கவிஞர் நெஞ்சில் பறம்பும், பரங்குன்றமும், கொல்லியும், இமயமும் கவினுறக் காட்சியளித்துக் கவிதையில் உயர்ந்துநின்றன. அனைத்திலும் ஆங்கிலக் கவிஞர்போல நேரடியாகத் தம் சுவையின்பங்களைக் கூறினாரில்லை. இதனாற்றான், தமிழ் இலக்கியம் இமயவரம்பாக உயர்ந்து நிற்கிறது. நந்தமிழ்க் கவிஞர்களின் தனிப்பட்ட சுவையின்பமெல்லாம் பொது நோக்கில் நின்று வல்லமைபெற்றன. 'புலவர் காடுகளிலும் மலைகளிலும் சுற்றித்தம் சொந்த அனுபவங்களின் மகிழ்ச்சியில் ஆழ்ந்துவிடாமல், அவ்வனுபவத்தைத் தாம் படைக்கும் மாந்தரின் உணர்வுகளையும், செயல்களையும் விளக்கப் பயன்படுத்திக்கொள்ளுகிறார்கள். இவ்வாறு மனித வாழ்க்கையும், இயற்கையும் பிணைந்திருக்கின்றனவே யன்றி ஆங்கிலக் கவிஞர்கள், Ode to Autumn, Ode to Nightingale, The Daffodiles' என்பவற்றில் பாடுவதுபோல் இயற்கை தனியாகப் பாடப் பெறவில்லை' என இதனை எடுத்தியம்புவர்[27].

4.1.1. தமிழ்க்கவிஞர்கள் மலையைப் பாடும்பொழுது அதன் வளத்தைக் குறித்தனர். மலையின் உயர்ச்சி, நிலத்திணைகளின் மாறுபாடு ஆகியவற்றை உணர்த்தினர். இயங்குதிணைகளாம் 'அரிமாவும், பரிமாவும் களிறும், கராமும், பெருமலை விடரகத்து ஒருங்கே குழுமியதைக் கண்டுரைத்தனர்[28].

4.1.2. ஆங்கிலக்கவிஞரின் மலைபற்றிய கவிதைவளத்திற்கு அவர்கள் வாழ்ந்த மலைச்சூழல் காரணமாயமைந்தன.[29] இதனால் மலையைப்பற்றிய வருணனையெல்லாம் சிறப்பாகத் தரமுடிந்தது மட்டுமல்லாமல் இயற்கையின் எழில் நலத்தையும் உலகிற்குணர்த்த முடிந்தது.

4.1.3. சங்கப்புலவர்களில் கபிலருக்கே இத்தகு மலை வாழ்க்கை அமைந்து கவிபாடச் செய்தது. எனினும், பிற புலவர்களும் மலைவாழ்க்கையில் ஒன்றியோ அல்லது மலைச்சூழலை விழைந்தோ தங்கள் பெயர்களையும் அதனுடன் இணைத்துக் கொண்டனர்.[30]

4.1.4. சங்கப்புலவரின் மலைக்காட்சிகளில் கவிவளத்தோடு கற்பனை வளத்தைக் கவினுறப் பாடியதைக் காணலாம். திளைத்தாட அருவியும், குளித்தாடச் சுனையும், பசியாறக் கனியும், களித்தாடத் தேறலும் புலவர்களைக் கவிபாடச் சொல்லியதெனலாம்.

5.1. ஆங்கிலக் கவிஞர் போன்று நேரடித் தொடர்பாக மலையின் கொடுமை கூறப்படாவிடினும், மலையால் உண்டாகும் குளிரின் கொடுமை கூறப்படுகிறது.[31] அகமாந்தர் நோக்காகப் பனியின் கொடுமை கூறப்படுகிறது.[32]

5.2. மேலை நாடுகளில் மலை உயர்ச்சியும், மிகக்குளிர் உணர்ச்சியும் எரிமலைக்கொடுமையும் நம்நாட்டு மலைகளில் இல்லாதது, மலையின் கொடுமை நந்தமிழ்க் கவிஞர்களை ஆட்படுத்தவில்லை யெனலாம். மேலும் நந்தமிழ்க் கவிஞர்கள் உரிப்பொருள் பின்னணிக்கே மலையை நோக்கியதை உணரமுடிகிறது. மேனாட்டார் போன்று பனிக்காட்சியை வருணனை வாயிலாக வெளியிடாவிட்டாலும், குளிர்காலக் கொடுமைவாயிலாகப் பனியின் தன்மை சுட்டப்படுவதைக் காணலாம்.[32a]

6.1. உயர்ந்த மலைப்பகுதியையும், அதன் உயர்ச்சியையும் குறித்த புலவர்கள், விண்ணைக்கிழித்துச் செல்வதான உயரமுடையதெனவும், சுவர்க்கத்தையும் சென்று காண்பதான உயர்ச்சியுடையது எனவும் கண்டனர். தமிழ்க்கவிஞர்கள் வான் தோய் உயர்வரை என்றும்,[33] விண்ணுற ஓங்கிய பனியிருங் குன்றம் என்றும் குறித்தனர்.[34] உயர்ந்த மலை குறிப்பிடப்படுமிடத்து, மலைமிசை நிவந்தோங்கிய பைங்கண் மூங்கிலின் உயர்ச்சியைக் கூறி அது அசைந்தேகும் மழை மேகத்தைக் கிழிப்பதாகக் கூறுகிறார் ஒரு புலவர்.[35] உயர்ந்த மலை உச்சியில் காணப்படும் மேகங்களைத் தடுத்து நிறுத்துவதாகக் கூறுகிறார் இன்னொரு புலவர்.[36]

6.2. ஆங்கிலப் பெரும்புலவரான சேக்சுபியர், உயர்ந்தமலை சுவர்க்கத்தைச் சென்று முத்தமிடுவதாகக் காண்கிறார்.[37] மேலும்

மலையின் உச்சி, சுவர்க்கத்தைத் தொடுவதாகக் கற்பனை செய்கிருர்.[38] ஜான்பிலிப்ஸ் (John Philips) என்பார் பிளின்லிமான் மலை மேகத்தைக் கிழித்து நுழைவதாகக் காண்கிருர்.[39]

6.3. உயர்ந்த மலைப்பகுதிகளைக் காணும்போதெல்லாம் மேகம் சூழ்ந்த மலைக்காட்சிகள் புலவர்தம் கண்களுக்கு விருந்தாயமைவன. நெடுமலையில் மேகக் கூட்டங்கள் அசைவதாகவும், தவழ்வதாகவும் தூங்கி ஓய்வெடுத்துக் கொள்வதாகவும் கண்டனர்.

6.4. பஞ்சுபோல் நுண்ணியதான மேகக்கூட்டங்கள் மலையில் தவழ்வதாகக் காண்கிருர் கபிலர்[40] மேகக் கூட்டங்கள் மலையில் தங்குவதாகக் கூறுகிருர் புறநானூற்றுப் புலவர் ஒருவர்.[41] இவ்வாறே மலையில் மேகங்கள் தவழ்ந்து அசைவதாகவும், தங்கி ஓய்வெடுத்துக்கொள்வதாகவும் பிற கவிஞர்கள் காண்கின்றனர். மில்டன் தன்னுடைய 'L' Allegro என்ற பாவியத்தில், மலையில் மேகங்கள் தங்கி ஓய்வுகொள்வதைக் குறிக்கிருர்.[42] காளிதாசரும் தன்னுடைய 'மேக சந்தேசம்' என்ற பாவியத்தில் மேகங்கள் மலையில் தங்கியும், தவழ்ந்தும், உறங்கியும் ஓய்வெடுத்துக் கொள்வதைப் பலபடக் கூறுகிருர்.[43]

6.5. கவிஞர்கள், மலையின்கண் மேகக் கூட்டங்கள் விளையாடுவதைக் குறிப்பர். மழைமுகில் அசைவதாகவும், ஆடுவதாகவும் கண்பர்.[44] ஆங்கிலக் கவிஞரான பைரன் 'மேகங்கள்' என்ற கவிதையில், மலையின் மடியில் மேகங்கள் விளையாடுவதைக் குறிப்பார்.[45]

6.6. மலையின் தன்மையில், மேகக்கூட்டங்கள் மோதுதலால் உண்டாகும் மின்னலைக் கண்டு, தமிழ்க்கவிஞர் பலபடக்கூறுவர். மேகம் மோதி மின்னவும், மலை தன்னுடைய கண்ணிமைப்பதாகக் காணுகிருர் ஒரு புலவர்.[46] இரவில், மலை தனது கண் கெட மின்னியதாகக் குறிக்கிருர் பிறிதொரு புலவர்[47] டிரைடன் (Dryden) என்பார், மேகங்கள் மின்னவும், மலை தன்னுடைய தலையை அசைப்பதாகத் தோற்றுகிறது என்பர்.[48]

6.7. மலையின் சூழல் அமைதி நல்குவதாகப் பலரும் குறிப்பர். மலை உறங்குவது போன்ற அமைதியும், தனிமையும் கொண்டதாகக் கூறுவர். இருண்டவேளையில் மலை உறங்குவது போன்ற அமைதியில் உள்ளதாகக் குறிப்பர் ஓர் அகப்புலவர்.[49]

மலையைப் பெரிதும் போற்றும் வேட்சுவொர்த்து இருண்டவானில் அமைதியும், தனித்து நிற்கும் மலையில் அமைதி சான்ற உறக்கமும் குடிகொண்டதாக உரைப்பர்.[50] ஜான் டையர் (John Dyer) தான் பாடிய 'கிரோங்கர் மலை'யைக் (Grcngar hills) குறிக்கும் பொழுது செவிக்கும் கண்ணிற்கும் அமைதி விருந்து நல்குவதாகக் காண்பர்.[51]

6.8. மலையையும், பாறையையும், பெருங்கல்லையும் கண்டு அவற்றை நந்தமிழ்க் கவிஞர்கள் யானையாக உவமித்துப் போற்றியமை மிக்க கவிநலம் தருவன.[52] காளிதாசரும், மலையானையின் உடலில் மேகம் அழகுற பல வடிவங்கள் எழுதி மேற்செல்வதைத் திறம்படக் கூறுவர்.[53]

6·9· மலையை உயிர்களின் தாயகமாகப் போற்றுவர்.[54] மலையை இறைவன் உறையும் இடமாகப்பழந்தமிழர் கண்டனர்.[55] கிறித்தவரும் மலையை இறைமையின் திருவடியாக எண்ணி அது அளிக்கும் அமைதிப் பேரின்பத்தைக் குறித்தனர்.[56]

7·1· மலைபாடிய புலவர்களில்—மேலைப்புலவர்களும், நந்தமிழ்க் கவிஞர்க்கும் அமைந்த பொதுவான மாறுபாட்டை இவ்வாறு குறிக்கலாம் :—

(1) ஆங்கிலக் கவிஞர்கள் மலைவாழ்க்கையில் ஈடுபட்டு அழுந்தித் தமது கருத்துக்களை நேரடியாகக் கூறுதல்; தமிழ்க் கவிஞர்கள் அங்ஙனம் கூறாமை.

(2) மலைக் கொடுமையை, ஆங்கிலக் கவிஞர்கள் உணர்ந்த வண்ணம், உணர்த்திய வண்ணம் தமிழ்க்கவிஞர் எடுத்துரைக்காமை,

(3) பனிக்காட்சியை அழகிய காட்சி வருணனையாக ஆங்கிலக் கவிஞர் எடுத்தியம்பியமை. தமிழ்க்கவிஞர் குளிர்காலக் கொடுமையில், அகமாந்தர் நோக்கில் பனிபற்றிக் கூறியமை.

(4) ஆங்கிலக் கவிஞர்களும், கிரேக்க உரோம இலக்கியங்களும், வடமொழிப்புலவர்களும் மலையைப் புராண இதிகாச வழித் தொடர்புப்படுத்திக் (Legend) கூறியமை. இவை சங்க இலக்கியத்தில் மிக அருகியே பேசப்பட்டமை.

8·1· மலைபற்றிக் கவினுறவடித்த கவிஞர்கள் 'ஓங்கிய பல் புகழும் குன்றினோடொப்'பதாகக் கண்டனர்.[57] வறனுறல் அறியா நறுஞ்சாரலில்' வாழ்ந்து களித்தனர்.[58] மலைபற்றிய சிந்தனைகள் இலக்கியத்தில் அழியாத் தன்மைபெற்று ஒளி நல்குவன. 'மலையின் எழிலில் தோய்ந்து மகிழாத ஒருவர் புலவ ரெனப்படும் தகுதியுடையார் அல்லர்[59] என்ற கூற்றை நோக்கும் பொழுது அவருள்ளமெல்லாம் அணிமலையின் அகலறையில் திரள் கொள்ளும்; ஆண்டெழும் அசைவளியில் நசைகொள்ளும்; கருவி வான் கண்டு களிகொள்ளும்; அருவியின் இசை கேட்டு ஆர்க்கும்; கவானின் களிதேன் உண்ண அவாவும்; அவிரொளி இடர்தவிர்க் கும். இவ்வாறு மலையையும் அது தரும் அழகையும், இன்பத்தை யும், அமைதியையும் எண்ணுமலிருக்கப் பாவலரால் இயலாது.

குறிப்புகள்

1. புறநானூறு 58, 22 மனோன்மணீயம், தமிழ்த்தாய் வாழ்த்து.
2. சிறுபாணாற்றுப்படை. வரி 1-2.
3. William Dwight Billings' Intd; in 'The Mountains.' (Life Nature Library)
4. திருக்குறள் 737.
5. ,, 742.
6. ,, 899. (குன்றன்னார்) சீவகசிந்தாமணி 2789 (மல்லன் மலையனைய மாதவர்.)
7. கொங்குவேளிர். பெருங்கதை.
8. James Howel "Epistle Ho Elianae." Book I Sec I. Letters 23-24.
9. John Evelyn 'Diary' PP 185—189.
10. Addison. Geneva and the Lake.
11. Hutchinson. Excursion to the Lakes PP 11.
12. Thomas Amory. Life of John Buncle II·97.
13. Blackmore. The creation III 409.
14. Myra Reynols. Nature in English Poetry. P. 14.
15. Pennecuik. Description of Tweedale P 45.
16. Tickell. Oxford I : 144.

17. Petrarch. Letters

18. Burnell. To Mr. Pope.

19. Johnson. Works IX. 35.

20. Wordsworth. Line witten a few miles above Tintern Abbey on revisiting the banks of wye during a tour :—
A lover of meadows, and woods
And mountains.

21. Wordsworth : Lucy 111/3-4.
Among the mountains did I feel.
The Joy of my desire.

22. ,, : On Nature's Imitation do I come 1-3
Embrace me then ye hills and close me in
Now in the clear and open day I feel
your guardian ship.

23. ,, : Written in March :
There is a joy in the mountains

24. Graham Hough: The Romantic Poets.

25. Bradley A.C. Oxford lectures on Poetry P. 141

26. Byron : Childe Harold, canto III-72.
I live not in myself but I become portion of that around me, and to me High mountains are a feeling.

27. வரதராசன் டாக்டர் மு. பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை. பக் 604.

28. கலித்தொகை 103 18-19.

29. John Dyer என்பார்க்குத் தெற்கு வேல்ஸ் மலைக்காட்சியே 'The Grongar Hills, The country walk, The Fleece போன்ற நற்கவிதைகளை வழங்கியது. Thomson என்பார்க்குச் செவியத் மலையே The seasons என்ற அருங் கவிதையை ஆக்கித்தந்தது. William Pattisonக்கு வெஸ்ட் மோர்லாந்து மலையே இளமை நினைவுகளைக் கவிதை யாக்கியது.

30. பெருங் குன்றூர்ப் பெருங் கௌசிகனார், பெருங் குன்றூர் கிழார், இடைக் குன்றூர் கிழார், இறங்குகுடிக் குன்ற நாடன், கணியன் பூங்குன்றனார், குன்றம்பூதனார்,

குன்றூர்கிழார், மலையனூர், இரும்பொறை, குன்றியனூர் போன்றோர் குன்றை விழைந்து வாழ்ந்திருத்தல் கூடும்.

31. குளிரின் கொடுமை தமிழிலக்கியங்களில் பேசப்படுகிறது. நெடுநல்வாடை குன்றையும் குளிரவைக்கும் கூதிர் காலத்தை விதந்தோதுகிறது. நெடுநல்வாடை வரிகள் 1-12 ஒப்புமை Keats. The Eve of St. Agnes St. I.

32. பனிக்காட்சி பற்றிய காட்சிவருணனை ஒரோவிடத்து இருப்பதாகக் கொள்ள இடமுண்டு. எனினும் பனிஎதிர் பருவம் அகமாந்தரின் உணர்ச்சியை விளக்கவந்தன. பார்க்க ஐங் 223/3-4; 233/1; குறுந் 68/3; 317/6-7; அகம் 378/13.

32. பனிபற்றி வருவன, பனிபடுபன்மலை அகம் 101/17, பனிகூர் அடுக்கம் 288/14 பனியிருங்குன்றம் ஐங் 337/4; பனிபொழிசாரல் பரி 8 52; பனிவரை. புறம் 200/1; பனி படு சிமையப் பன்மலை அகம் 329-14. இவற்றில் இமயத்தைக் குறித்து வந்தனவும் சில.

33. அகம் 139/6.

34. அகம் 281/10.

35. நற்றிணை 28/7-9.

36. புறம் 157/8.

37. Shakespeare : Hamlet. iii; V : 59.
New lighted on a heaven Kissing hill.

38. Shakespeare : Othello I : iii : 141.
Hills whose heads touch heaven.

39. John Philips : Cyder I : 106.
That cloud piercing hill Plinlimmon.

40. நற்றிணை 353/1-3. 41. புறம் 131/1.

42. Milton. 'L' Allegro : Mountains on whose barren breast
The labouring cloud do often rest.
L 73-74

43. Kalidhasa : Meghasandesa Ch I (Purva Megha)
St. 12, 13, 17, 25 & 26.

44. கலி 103/20; மதுரைக் காஞ்சி 355; குறுந் 308/1.

45. Byron : The clouds St. 1/7-8
When rocked to rest on Their mother's breast,
As she dances about the sun.

46. நற்றிணை 112/8-9.

47. அகம் 92/1-2.

48. Dryden John : The Indian emperor.

49. அகம் 139/1-2

50. Wordsworth : The silence that is in the starry Skies
The sleep that is among the lonely hill.

Another poet might have written : The Peace that lies among the lonely hills, and it would have been a good line. But Wordsworth out of his deep long knowledge of mountains writes: The sleep that is among the lonely hills என விளக்குவர் Helen Derbishire. The Poet Wordsworth. p. 178

51. John Dyer : The Grongar Hill.
On the brows of mountains high.
In silence feasting ear and eye.

52. அகம் 99/3-4; 128/11; 205/17.

53. Kalidhasa: Meshasandesa Ch. I. St. 19

54. கலியாணசுந்தரம் திரு.வி. இமயமலை அல்லது தியானம் பக். 8

55. குறுந் 87.

56. The Bible Isaiah 52 : 17.

57. பரிபாடல் 7/24. 58. கலித் 53/1.

59. Johnson 'Works'.

Academy of Tamil Culture

Office-Bearers 1974

President :
Dr. V. M. Gnanapragasam S. J.

Vice-Presidents :
Thiru S. Lakshmirathan Bharathi
,, Louis Gonsalvez
,, N. Mahalingam
,, Dr. S. Shankar Raju Naidu
,, Dr. C. Balasubramanian

Hon. Secretary :
Thiru K. P. Aravaanan

Joint Secretary :
Thiru M. Deivanayagam

Hony Treasurer :
Thiru V. Sundaramurthy Mudaliar

Members of the Governing Council :

Thiru/Thirumathi

S. N. A. S. A. Annamalai Chettiar, Karaikudi
Karumuttu Thiagaraja Chettiar, Madurai
Rev. Fr. Maria Gnanam; S. J. Sattankulam
A. V. Meiyappa Chettiar, Madras
A. V. M. Sarawanan, Madras
K. L. T. K. R. Ramaswamy Chettiyar, Karaikudi
A. Subbiah Pillai, Madras
S. L. Sathappa Chettiar, Karaikudi
Rev. Fr. Xavier S. Thaninayagam, Ceylon
V. S Thiagaraja Mudaliar, Madras
Prof. Bagirathi, Courtallam
Dr. M. Israel, Madurai
N. Murugesa Mudaliar, Madras
Prof. M. S. Vimalanandan, Madras
The Director, Tamil Research Centre, Madras
Prof. P. B. Rajeswari, Namakkal
The Library Warden, St. Xavier's College, Palayamkottai
Dr. N. Sanjeevi, Madras
Prof. Krishna Sanjeevi, Madras
Dr. Avvai Natarajan, Madras
Dr. C. E. Ramachandran, Madras
T. Sadasivam, Madras
Dr. K. K. Pillai, Madras
Dr. Indira Somasundaram, Madras
Dr. K. Meenakshisundaram, Thiruppur
Dr. S. V. Subramanian, Madras
Kodumudi Shanmughan, Madras
Director, Aikya Aaalayam, Madras

The Academy of Tamil Culture

The Academy which counts among its founders illustrious savants of Dravidian studies was publishing from its inception – from early 50's – a quarterly review called 'Tamil Culture' dedicated to the study of Tamiliana. The contributions by leading Tamilologists drawn from all over the world and measuring up to the highest standards of research in the field that appeared in this periodical carved for it a lofty niche in the hall of global Tamil research. Unfortunately after 15 years, in 1967, to the great disappointment of Tamil Scholars the Journal had to suspend publication owing mainly to financial stringency.

However, bowing to the insistent demand of lovers of Tamil in India and abroad over the years, the present Governing Council of the Academy ventured to revive 'Tamil Culture' as a bilingual half-yearly, each issue projected as a symposium on a suitable subject. First of this series was released in June this year with the title **Some Observations on Tamil Folklore.** The present one on **Comparative Literature** is the second in this series. We are confident that this will receive as warm and cordial a reception as our first issue had.

It was not without some trepidation that we embarked on this novel literary experiment. We therefore, owe our heaviest debt of gratitude to our readers for their practical endorsement of our venture. After all the proof of the pudding is in the eating. Judging from the trend of sales we believe that we have received ample proof from discerning lovers of Tamil Research.